ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—௪௭ } யாழ்ப்பாணம்:— யுவ ஹு மார்கழி மீ ௨௫ (1936 ஜனவரி 9) வியாழக்கிழமை { இலக்கம்—௭௫

## என்றுமுள தென்றமிழ்.

### பல்லாயிரம் ஆண்டுத் தொன்மைபெற்ற பைந்தமிழ் அன்னையின் அழகு.

### தமிழ்மொழியின் ஒப்புயர்வற்ற இலக்ஷணம்.

[ சென்னை ஸ்ரீ V. நாடிமுத்துப்பிள்ளை M. L. C. ]

முற்றுடர்.

#### தற்கால நிலைமை.

பண்டைக் காலத்தே ஆசிரியரும் அவரைச் சார்ந்த சிலமாணவருமாகப் பயிலப்பட்டு வரினும், வித்தையைப் பயிற்சி, ஊர் ஊராக, நாடு நாடாக எங்கெங்கும் பரவியிருந்தது. சிறந்த ஆசிரியர்கள் இல்லாத ஊரும், அவர்பாற் கல்வி பயிலாத ஊரும் இருந்ததில்லை. இப்போதோ உயர்தரக் கல்லூரிகள் இருக்குமிடங்களோ மிகச்சில. சென்னை மாகாணத்திற்லே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தஞ்சையா நாட்டாண்மைக் கழகத்தைச் சார்ந்த திருவையாற்று அரசர் கல்லூரியிலுமே, தனித்தமிழ் வித்துவான் உயர்தரக் கல்விகள் பயிலப் பெறுகின்றன. தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரது பெரு முயற்சியால் அண்மையில் ஒரு தனித்தமிழ் வித்துவான் கல்லூரி தொடங்கப்படுமெனவும், தமிழ் மொழியும், சைவ உலகமுஞ் செய்த தவப்பயனாய் அவதரித்திருக்கும் திருப்பாதிரிப்புலியூர், ஸ்ரீ ஞானியார் மடாலயபீடத் தலைவர்களாகிய சுவாமிகளது தம் முயற்சியால், அங்கு ஒரு தனித் தமிழ் வித்துவான் வகுப்புக் கல்லூரி தொடங்கப் பெறுமெனவும் அறிந்து மகிழ்கின்றேன்.

தனித் தமிழ் வித்துவான் பயிற்சி பரவுவதற்கு ஒரு முக்கியமான காரணமாகவிருப்பது மற்றொன்றுகும். அது, திருப்பனந்தாள் மடாதிபதிகளாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தனித்தமிழ் வித்துவான் பரீட்சையில் முதன்மையில் தேர்ச்சியுறுபவர்களுக்கு ஆயிரம் ரூபா பரிசு ஏற்படுத்தி யிருப்பதாகும். தமிழ்த்தாயின் புதல்வர்களில் நம் சுவாமிகள் தலைசிறந்தவர்களன்றோ!

#### கல்லூரிகள் பல வேண்டும்.

இவ்வனம் இம்மாகாணம் முழுவதற்கும் இரண்டொரு கல்லூரிகள் போதியனவாகுமா? பொருளுடையோரெல்லாரும் ஆங்கிலக் கல்வியினையே மேலிட்டால், தம் மக்களை ஆங்கிலக் கல்லூரிகட்கு அனுப்பி விடுதலின், பொருளில்லாதவரே, பெரும்பாலும் தனித்தமிழ்ப் பயிற்சியினையடைய விரும்புகின்றனர். எனவே, இத்தகைய பிள்ளைகட்கு உணவு, உடை, உறையுள் முதலிய வசதிகள் செய்தளித்து, அறச்சாலைகள் வைத்து நடாத்த வேண்டியதாகின்றது. தஞ்சை நாட்டாண்மைக் கழகத்து ஆதரவில் திருவையாற்றில்நடக்கும் அரசர் கல்லூரியில் தமிழ்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளும் பயிற்றப் பெறுகின்றன. ஆசிரியர்கள் ஊதியம் உணவுச்செலவுகட்கெல்லாமாக ஆண்டு ஒன்றக்கு இலட்சக்கணக்கான ரூபாய் வேண்டப் பெறுகின்றது. இத்தகைய பெருஞ் செலவுகளை ஏற்று நடாத்துமிடம் இவ்வொன்றுதானுமல்லையாயின் புலமை பற்றிய தனித் தமிழ்க் கல்லூரிகளோ, அவற்றிற பயில்வரோ இலவாகுமன்றோ? இங்ஙனம் தனித்தமிழ்க் கல்லூரிகள் வைத்து நடாத்துவது, எல்லோருக்கும் இயலாததாயினும், அரசாங்கத்தினர், மாகாட்டாண்மைக் கழகத்தினர், சைவ வைணவ மடாலயத் தலைவர்கள், மிக்க வருமானமுள்ள கோயில்களின் தரும கர்த்தாக்கள் மிக்க செல்வவளம் பொருந்திய சிறாசர்கள் பெருஞ் செல்வர்கள் என்ற இன்னவர்கள் ஆங்காங்கு வைத்து நடாத்துதல் அரிய செயலாகுமா? கல்லூரியே வைத்து நடத்துவது இயலாததாயினும், இயன்றஅளவு மாணவர்கட்கு உணவு முதலிய வசதிகளளித்து, கல்லூரிகளிருக்குமிடங்களுக்கு அனுப்பியாவது பயன்படுத்தலாமன்றோ? தஞ்சையாநாட்டாண்மைக் கழகத்தினர் இங்ஙனம் உதவுதற்கு அனுப்பப் பெறும் மாணவர்களெல்லோரையும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாக வுள்ளார்கள். இவர்கள் உத்தரநாடு, இராஜாமடம், நீடாமங்கலம் முதலிய இடங்களிலும் ஆரம்ப மத்தியதர உயர்தர ஆங்கிலப் பள்ளிக்கூடங்களை உணவு முதலிய வசதிகள் தரும் அறச்சாலைகளுடன் அமைத்து நடாத்தி வருகின்றனர். ஆதலின், இன்னு மதிகமாகத் தனித் தமிழ் மாணவர்களை ஏற்க இயலாதவராகின்றனர். இங்ஙனம் பேறுகள் செய்வதற்கு உரிய பெருஞ் செல்வங்களைத் தருமத்திற்காக வைத்துப் புகழுடம்பு எய்திய தஞ்சை மன்னர் ஏகோஜி மகாராசாவுக்கு இத் தமிழுலகம் எத்துணைக் கடமைப்பட்டுள்ளது! தமிழ்த்தாயின் தவப்புதல்வர் இத் தமிழ் மன்னரேயன்றோ!

#### தற்காலத்திற்கேற்ற நூல்கள்.

இக்காலத்திற்கு வேண்டிய நூல்களை இயற்றுவது நமது மிக இன்றியமையாத முதற் கடமையாகும். இத்தகைய நூல்களை ஆக்குவதற்கு

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

## ஸாம வேதம்.

### ஐரோப்பியரின் ஆராய்ச்சி.

### ஜெர்மனியில் 42 நூல்கள்.

ஸாம வேதம், உபாசனை மந்திரங்கடங்கிய நூல். இவ் வேதத்திலுள்ள 1875 மந்திரங்களில், சுமார் 1785 மந்திரங்கள் ரிக்வேதத்தினின்று எடுக்கப்பட்டவை. நான்கு மந்திரங்கள் அதர்வத்தினின்றும், ஒரு மந்திரம் யஜுர்வேதத்தினின்றும் எழுதப்பட்டவை. மிகுதியான மந்திரங்கள் ஸாம வேதத்திற்காகத் தனிமையாக எழுதப்பட்டவை.

#### ஆர்சிகங்கள்.

இச் சாமவேதத்தை பூர்வார்சிகம் உத்தரார்சிகம் எனப் பிரித்துள்ளார்கள். பூர்வமென்றால், முன்வரும் பிரிவு. உத்தரம் என்றால் பின்வரும் பகுதி. ஆர்சிகம் என்றால், மந்திரக் கூட்டங்களுக்குப் பெயர். பூர்வார்சிகங்களில் ஆறு பிரபாடகங்கள். 12 பிரபாடகங்கள் பிரபாடகங்களை படலம் எனச்சொல்லலாம். இப்பிரபாடகங்களை தசதிகள் அல்லது பத்து மந்திரக் கூட்டங்களாய்ப் பிரித்துள்ளார்கள். பூர்வார்சிகத்தை ஆக்னேய காண்டம் ஐந்திர காண்டம் பாவமான காண்டம், ஆரண்யகாண்டம் எனவும், விஷயங்களுக்கேற்றவாறு வகுத்துள்ளார்கள். மகா நாமனியார்சிகம், பஞ்சபுரீஷபதங்கள் என சொல்லப்படும் மொழிகளும் பூர்வார்சிகத்தைச் சேர்ந்தனவே.

உத்தரார்சிகத்தை ஒன்பது பிரபாடகங்கள் 22 அரை பிரபாடகங்களாகப் பிரித்து கடைசியில் கண்டங்களாக வகுத்து பிரகாதகங்கள் என்னும் மூன்று மந்திரத் தொகுதிகளை அடைந்துளது.

#### ஸாமனும ஐரோப்பியனும்.

நான் ஸாமவேத பிராமணன் என ஒருவன் சொல்வதைத் தவிர, நமது சாதாரண ஜனங்கள் ஒன்றுமே அறிவதில்லை. படித்தவர்களாராய்ச்சியும் குறைவு. ஆனால் ஐரோப்பியர்கள் ஸாமவேதத்தை அதிகமாய் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். சில மாதங்கள் முன்னர், டச்சுக்காரனை ஆர்னால்டு பேக் என்னும் அறிஞர் ஒருவரைக் கண்டேன். அவர் இந்தியா முழுவதும் சுற்றி இங்கு செய்யப்படும் ஸாமகான முறைகளையெல்லாம் கிராமபோன் ரிகார்டு எடுத்துக் கொண்டிருந்தார். இவைகளையெல்லாம் ஹாலண்டு எடுத்துச் சென்று டாக்டர் காலண்டுடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யப் போவதாகச் சொன்னார். ஸாமவேதத்தைப் பற்றி சுமார் 42 நூல்கள் ஜெர்மனி பாஷையிலிருப்பதாகவும், டச்சு பாஷையில் ஸாமவேத சாஸ்திர சம்பந்தமான பல நூல்களிருப்பதாகவுஞ் சொன்னார். இன்னம் பல நூல்கள் வெளியிடப் போவதாகவும் கூறினார்.

## ஒப்புயர்வற்ற உன்னதக் காங்கிரஸ்.

### தியாகிகளை அளித்த தேசோத்தாரண சங்கம்.

### சென்ற காலம் ஆற்றிய செயற்கரும் சேவை

### இலங்கைக் காங்கிரஸ் சுயநலப் புலிகள் வடதுருவக் கரடிக்குச் சமானம்.

(நீர்கொழும்பு திரு W. S. சார்லிஸ் டர்ணர்ந்து)

கடந்த மார்கழிமாத இறுதியில் இந்தியாவிலும் இலங்கையிலும் இவ்விழாக் கொண்டாடப்பட்டது. 50 வருடங்களுக்குமுன் அதாவது 1885ம் ஆண்டு படித்தசிலரால் காங்கிரஸ் மகா சபை தோற்றுவிக்கப்பட்டது. இச் சபை ஏற்படுத்தப்பட்டதின் நோக்கம் என்னவெனில் இந்தியாவும் இதர நாடுகளைப்போல சுதந்திரத்தோடும் கௌரவத்தோடும் வாழ வேண்டுமென்பதே. காங்கிரஸ் ஏற்பட்டு 50 வருடங்களுக்கிடையில் ஆச்சரியப்படத்தக்க விதமாய் முன்னேற்றமடைந்திருக்கின்றது. காங்கிரசின் நகிரமான சரித்திரத்தை இந்தியாவிட்டுக் கற்றிருத்தல்போதாது அந்நியருடைய ஆட்சியை வெறுத்துச் சுதந்திரம் வேண்டுமென்று விரும்பும் இலங்கையராகிற நாமும் கண்கற்றிருக்கவேண்டும். வாசகநேயர்களே, சிறப்பு உரிமை சுதந்திரம் சுயாதீனமிழந்து அன்னிய அதிகாரவர்க்கத்தினர்க்கு அடிமைப்பட்டிருக்கும் பாரத மக்களுக்கு காங்கிரசினால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளை எண்ணிச் சொல்லமுடியாது. இந்தியாவரும் அடிமைகள் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டார்கள். தலைவரும் நிதான புத்தியும் சுதந்திர உணர்ச்சியும் இந்தியருக்கு இல்லையென்று அந்நிய தேசத்தார் அனறைக்குத் தீர்ப்பளித்திருந்தார்கள் பாரத மக்களும் இந்தியச் சாதியின் கௌரவத்தையும் இந்திய தேசத்தின் மானத்தையும் முற்றும் இழந்து வேடனைக்கண்ட மானக்கூட்டத்தைப்போல் கும்பல் கும்பலாக ஓடிக்கொண்டிருந்தனர். இந்திய மக்களுக்கு உணர்ச்சியைக் கொடுத்து உறங்கிக்கொண்டிருந்த பாரதமக்களைத் தட்டி எழுப்பிய தனிப்பெருஞ் சிறப்பு காங்கிரசென்ற மகாசபைக்கு மட்டுமே உரித்தனதாகும். ஆங்கிலக் கல்வி கற்ற சிலருடைய ஆதிக்கத்திலே ஆரம்பத்திலிருந்த காங்கிரஸ் மெதுவாகப் பாமரமக்களுடைய கவனத்தையும் தன்வயப்படுத்திக்கொண்டது. தமக்கென ஒரு ஸ்தாபனத்தை அமைத்து அதன் வழியாகத் தம்முடைய நோக்கங்களையும் அபிலாஷைகளையும் உலகம் அறியப் பகிரங்கப் படுத்தாத எச் சமூகத்தாரேனும் ஒருவகையிலும் முன்னேற்றமடையமாட்டார்கள் என்ற சரித்திரங்கள் இன்றைக்கும் நின்று கூறுகின்றன பொதுச் சங்கத்தை நிறுவி அதன் மூலமாக தமது ஒற்றுமையையும் லட்சியத்தையும் வெளியிடாத சாதியார் வாயில்லாத ஊமைகள் என்றுதான் கருதப்படுவார்கள்; எனினும் இந்தியர் உணர்ச்சியும் ஊக்கமும் முன்னேற்றமும் அற்றவர்கள் அல்ல; பேசத்தெரியாத ஊமைகளல்ல வாயில்லாச் சீவன்களல்ல என்பதை உலகத்தாருக்கு காங்கிரஸ் நிரூபணஞ் செய்து காட்டிவிட்டது. இத்தகைய செயல்களைப் புரிந்து வரும் காங்கிரசின் வலிமையை அடக்க ஒருசாரார் பாடுபட்ட போதிலும் அதன் வலிமை தினசரி வளர்ந்து கொண்டேவந்தது. அத்துடன் கண்கண்ட தெய்வமும் கலியுக புத்திரனுமாகிய மகாத்மா காங்கிரசுக்கு நுழைந்த உடன் எழுதப்படிக்கத் தெரியாத ஏழைகள் மனதிலும் சேற்றுவரையும் வீட்டுக்குள் அடைபட்டுக்கிடந்த பாரதநாட்டுப் பெண்மணிகள்உள்ளத்திலும் சுதந்தர ஆவேசம் மூண்டுவிட்டது. இந்திய சரித்திரமானது நம்மையாளுஞ் சாதியாரின் கவனத்தை மாத்திரமல்ல அகில உலகத்தோரின் முழுக் கவனத்தையும் இழுத்துக் கொண்டிருக்கின்றது அத்துடன் பாரதத்தாயின் விடுதலைக்காகப் பொருளையும் புகழையும் உடலையும் உயிரையும் தியாகஞ் செய்யும் தியாகமூர்த்திகளையும் உற்பத்தி செய்து விட்டது. அருங்கச் சொல்லுமிடத்து சர்வவல்லமை உள்ள பிரிட்டிஷ் சர்க்காரைத் தானும் கலங்கச் செய்து விட்டது இத்தகைய காங்கிரசின் பொன் விழாவைக் கொண்டாட நாம் பலவிதத்திலும் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம். இருந்தும் இந்தியாவில் மாத்திரமல்ல. இலங்கையிலும் காங்கிரஸ் என்ற தேசியசபை ஒன்று உண்டு தான்; அதில் காங்கிரஸ் புலிகளுமிருக்கிறார்கள் தான்; என்றாலும் இலங்கைக் காங்கிரஸ் புலிகளுக்கும் ருஷியாவில் வடகோடி பூமியிலுள்ள வெள்ளைக் கரடிகளுக்குஞ் சிறிது தான் மாற்றம். ருஷியர்வின் வெள்ளைக் கரடிகள் ஆறுமாதகாலம் கத தூங்கி

தொடர்ச்சி 2ம் பக்கம்.

# பாலர்பகுதி.

எனது அன்புமிக்க
மருமக்களே!

சென்றமுறை எங்கள் இலங்கையை ஆளும் தேசாதிபதி பல உத்தியோகத்தரை வைத்து இங்கேயுள்ள காரியங்களை நடப்பித்து வருகின்றார் என்று சொல்லித்தந்தேன் அல்லவா? நல்லது; இன்னும் கொஞ்சம் சொல்லித் தருகிறேன், கேளுங்கள்.

எங்கள் தேசத்திலே பல தெருக்கள் இருக்கின்றன. பல பாலங்கள் இருக்கின்றன. புகைரதங்கள் ஓடுகின்றன. தந்தி தபாற்கந்தோர்கள் இருக்கின்றன. சனங்களுக்குள்ளே நேரும் சண்டை சச்சரவுகளைத் தீர்க்கவும், கள்வர் முதலியவர்களுக்குத் தண்டனை விதிக்கவும், நீதிஸ்தலங்கள் இருக்கின்றன. தண்டனைபெறும் கள்வர் கொலைஞர், பாதகர் என்பவர்களை அடைத்துவைக்க மறியற்சாலைகள் இருக்கின்றன. இவைமாத்திரமா? இன்னும் பலபல நிலையங்கள் இருக்கின்றன. இவற்றை வைத்து நடத்துதற்குப் பணம் வேண்டும்? இல்லையா? இந்தப் பணம் எங்கேயிருந்து தேசாதிபதிக்குக் கிடைக்கின்றது? சொல்லுங்கள் பார்க்கலாம். அவர் தம்முடைய தேசத்தில் இருந்து கொண்டுவந்தாரா? மருமக்களே, இல்லை! இல்லை! அவர் அல்லது இங்கிலாந்தில் இருந்து வந்திருக்கும் வெள்ளைக்காரர் ஒரு சதமேனும் இங்கு கொண்டு வந்து செலவுசெய்யமாட்டார்கள். நேர்மாறாக, இங்கே தான் அவர்கள் பெருத்த சம்பளம் வாங்கித் தங்கள் ஊருக்கு அனுப்புகின்றார்கள். இதனை நலாய் எண்ணிக் கொள்ளுங்கள். ஆகவே இந்த இலங்கையில் நடக்கும் செலவுகளுக்கு எப்படிப் பணம் வருகிறது என்பதைக் கவனிப்போம். மருமக்களே, இந்தப் பணத்தை நாங்கள்தான் கொடுக்கிறோம்; நாங்கள் அந்தப் பணத்தைப் பலவிதமாய்க் கொடுக்கிறோம்.

## நாங்கள் பணம் கொடுக்கும் மாதிரி.

மருமக்களே, உங்களிற் சிலர் வேட்டி உடுத்திருக்கிறீர்கள்; சிலர் காற்சட்டை அணிந்திருக்கிறீர்கள் மருகிகள் அழகான சட்டைகள் அணிகின்றார்கள். சில மருகிகள் பட்டிலும், சில மருகிகள் பருத்தியிலும் ஆன துணிகளிற் சட்டை போட்டிருக்கிறார்கள்: என் மருமக்களில் ஆண்களாயுள்ளவர்களும், பெண்களாயுள்ளவர்களும் தத்தமக்குரிய உடுப்புக்களையணிந்து தலைசீவி, நெற்றியிற் பொட்டிட்டு, குறுநடை நடந்து பள்ளிக்குப் போகும்போது என்ன ஆனந்தம்! நீங்கள் போகும்போது உங்கள் மாமாவாகிய நானும், உங்கள் பெற்றோரும் பார்த்துச் சந்தோஷப்படுகின்றோம். இல்லையா? நல்லது. நீங்கள் அணியும் துணிகள் உங்கள் நாடாகிய இலங்கையிற் செய்யப்படுவன அல்ல. இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான் முதலிய வேறு தேசங்களில் இருந்தே துணிகளாய்வர, நாங்கள் அதனை யார்க்கணக்கில் வாங்கிச் சட்டைகளும், கவுண்களும், காற்சட்டைகளும் தைப்பிக்கின்றோம். நல்லது.

## தீர்வை.

எமது சட்டைகளுக்குரிய துணிகள், எங்கள் தந்தையர், மாமன், மக்கள் முதலியோர் அணியும் வேட்டி சால்வைகள், தாய்மார், அக்காமார், மச்சாள்மார் அணியும் சேலைகள் யாவும் பிறதேசத்தில் இருந்தே இங்கு வருகின்றன. இவை முதன்முதற் கொழும்பில இறக்குமதியாகின்றன. அப்படி இறக்குமதியாகும் போது, எமது தேசாதிபதியின் உத்தியோகத்தர் அந்தத் துணிகள்மீது ஓர் தீர்வை விதிக்கிறார்கள். அதாவது 100 ரூபா பெறுமதியான துணிகட்கு




இவ்வளவு பணம் கட்டவேண்டுமென்று கேட்டு அந்தப் பணத்தை, இந்தத் துணிகளை இறக்குமதி செய்யும் வியாபாரிமாரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுகின்றார்கள். இப்படிப் பெருந் தொகையான ரூபாய்களை உத்தியோகத்தர் பெறுகின்றனர். இனி, இந்தத் துணிகளை இறக்குமதி செய்யும் வியாபாரிமார் எமக்கு விற்கும்போது தாங்கள் அரசாங்கத்திற்குக் கொடுத்த தீர்வையையும் சேர்த்து எம்மிடம் பெறுகின்றார்கள். உதாரணமாக உங்கள் வேட்டி ஒன்று 2 ரூபாயாக இங்கிலாந்தி லிருந்து ஓர் வியாபாரிக்குக் கிடைக்கிறது என்றும் அந்த வேட்டிக்கு அவர் 50 சதம் தீர்வை கொடுக்கிறார் என்றும் வைத்துக் கொள்ளுவோம். எனவே 2 ரூபா 50 சதம் அவருக்குச் செலவாகின்றது. பின் அந்த வியாபாரிக்கும் இலாபம் வேண்டும் அல்லவா? ஆகவே அவர் 3-00 ரூபாயாக அந்த வேட்டியை விற்கிறார். மருமக்களே பார்த்தீர்களா? நாங்கள்தான தீர்வைக்காசு அரசினர்க்குக் கட்டியிருக்கிறோம். இப்படித்தான் நாம் பாவிக்கும் கோப்பை, பிங்கான், பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள் முதலியவற்றின் மீது தீர்வை விதிக்க, அத்தீர்வையை வியாபாரிகள் முதற் கொடுக்கின்றனர். பின்னர் நாங்கள் அதனை இறுக்கின்றோம். இப்படியே நாங்கள் பெருந்தொகையான பணத்தைக் கொடுக்கின்றோம்.

## முத்திரை முதலியன.

இனி, முத்திரை முதலியன மூலமாகவும் நாம் அரசாங்கத்திற்கு பெருந் தொகைப் பணம் கொடுக்கின்றோம். காடுகளை விற்பதாலும், கள்ளுத் தவறணை, சாராயத் தவறணைகளின் குத்தகைவிற்பதாலும் அரசாங்கத்துக்குப் பெருந் தொகைப் பணம் கிடைக்கின்றது. நிற்க,

இப்படிச் சேர்க்கப்பட்ட பணத்தையே எமது தேசாதிபதி தமது உத்தியோகத்தர் மூலமாகச் செலவழித்து எமக்கு நன்மை செய்கின்றார். சில சமையங்களில் கிடைக்கும் பணத்திற்கு மிஞ்சியதாகச் செலவு வந்துவிடும். சில வேளைகளில், செலவுக்கு மிஞ்சியதாய் வருமானம் கிடைக்கும். செலவு அதிகமானல், அச் செலவைச் சரிப்படுத்துதற்கு வேறும அதிகமாகப் பணம சேர்க்கவேண்டும். செலவுக்கு மிஞ்சினல், மிஞ்சிய பணத்தை என்ன செய்வதென்று தேசாதிபதி ஆலோசித்து ஏற்றபடி செய்வார்.

## புத்தி கூறுவோர்.

எனது அருமை மருமக்களே, மேலே கூறியதில் இருந்து ஒரு விஷயம் உங்களுக்கு நல்லாய் விளங்குகின்றது. அதாவது, எங்களுடைய நாட்டில் எங்களுடைய பணத்தைக்கொண்டே எங்களுக்கு நன்மையான காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதே. இங்கே ஏற்படும் செலவுகளுக்கு வெள்ளைக்காரர் தம நாட்டில் இருந்து வீட்டில் இருந்து பணம் கொண்டுவரவில்லை. ஆகவே, எமது பணத்தைச் செலவிடும்போது, இன்ன இன்ன மாதிரிச் செலவிடவேண்டும் இன்ன இன்னமாதிரிப் பணம்பெறவேண்டும் என்று நாங்களும் கூறவேண்டும்தானே. எங்கள் பணத்தைச் செலவிடும்போது எங்களுக்கும் அதிகாரம் இருக்கவேண்டும் அல்லவா? எம்மைக் கேட்காமல், மற்றவர்கள்—அவர்கள் தேசாதிபதியாயிருந்தாலென்ன இராசாவாய் இருந்தால் என்ன செலவு செய்யக்கூடாது; இதுதான்நீதி.

மருமக்களே இவ்வளவுடன் இன்று நிறுத்திக்கொள்ளுகிறேன், கொஞ்சம் கொஞ்சமாய்த்தானே சொல்லித்தரவேண்டும்; இல்லையா?

---

## பாலர் சங்கப் புதினம்.

### பரீட்சையிற் சித்தி.

1. எனது மருமக்கள் சோ. பாலசுந்தரமும் (57) சோ. கனகசுந்தரமும (58) 3-ம் வகுப்பிற் சித்தியெய்தி நாலாம் வகுப்புக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர்.

2. எனது அருமை மருமகன் பொ. கடுகாயகம் (201) சோதனையிற் சித்தி எய்தி ஆங்கிலம் 1st yr வகுப்பிற்கும் தமிழ் 5ம் தரத்திற்கும் மாற்றப்பட்டிருக்கிறார்.

3. வே. விநாயகமூர்த்தி (8) மார்கழி மாதம் நிகழ்ந்த பரீட்சையிற் சித்தி எய்தி ஆங்கிலம் 6ம் தரத்தில் மத்திய கல்லூரியிற் படிக்கிறார்.

மேலே சொல்லப்பட்ட எனது அருமை மருமக்கள் சோதனையிற் சித்தியடைந்ததையிட்டு அவர்களைப் பாராட்டுகின்றேன். எனது அருமைமருமக்களே! சோதனையிற் சித்தியடைவதுடன் மாத்திரம் நிற்கவொண்ணாது; உங்கள் உங்கள் வகுப்புகளில் முதலாம பிள்ளைகளாய் வரவேண்டும். அப்படி வந்தபின் "மாமா, நான் முதலாம பிள்ளையாய்வந்து விட்டேன்" என்று உங்கள் பூப்போன்ற கையினுல் எழுதி யனுப்பினுல், இந்தக் கிழவயதில் சந்தோஷப்படுவேன் அல்லவா? எத்தனை மருமக்கள் அப்படி எழுதுகின்றார்கள் பார்ப்போம்.

## மருமக்கள் பகுதி.

57. சோ. பாலசுந்தரம், ஆமாம மருமகனே; சேரும்போதுதான் 12 வயதுடையவராய் இருத்தல் வேண்டும்.

201. பொ. கடுகாயகம் எனது அருமைமருமகனே! கவலைப்படவேண்டாம்; நீ இப்படி எழுதியதை என் கண்ணாரக்கண்டு, படித்து மிகவும் துக்கம்அடைந்தேன்! உனது மாமா ஞாபகமறதியாய் ஏதும் செய்தால் இப்படிக்கவலைப் படலாமோ? நான் உன்னைக் கைவிடுவேனே? நாங்கள் ஒருவர்க்கொருவர் தூரத்தில் இருக்கிறோம்தான; ஆனல் மருமகனே, எமக்குள்ளேயிருக்கும அன்புக்குத் தூரம் என்ன செய்யும்? எவ்வளவோ உயரத்திலே, ஆகாசத்திலே சூரியன் இருக்கிறது. இருந்தாலும், இங்கே அதன ஒளி வீசுகிறது அல்லவா? ஆனபடியால் உன்னை மறந்துவிட்டேன் என்று எண்ணுதே; உன அங்கத்துவபத்திரம் அனுப்பியிருக்கின்றேன். இப்போது திருப்தியா? உன் சகோதரிகளையும் அங்கத்தவராக்கிவிட்டேன்? அவர்கள் சேமந்தானே?

44. சு. சாந்தாதேவி, என்ன மருமகளே! உன் கடிதங்களைக் காணவில்லை.

கு. கந்தவசிகரி அம்மாள்: மருகியே! சினம் வேண்டாம். உன் தந்தையார்க்கு என் பொருட்டுத் தொந்தரவு கொடுத்தல் முறையல்ல. புதிதாகக் கட்டுரைகள் எழுதி அனுப்பு.

242. சு. உருக்குமணி: கிருஷ்ணன் நாது எப்படி? நீயும் அதில் நடிக்கின்றனையோ?

இங்ஙனம்
உங்கள் வாஞ்சையுள்ள
சுப்புமாமா.

# உத்தியோக நியமனங்கள்.

---

## பட்சபாதம் காட்டப்படுகின்றதா? பொதுமக்களிடையே தோன்றியுள்ள உணர்ச்சி.

---

## டொனேமூர்த்திட்டத்தின் பெரும்பிழை. அதனை மாற்றவேண்டிய அவசியம்.

---

(பேராசிரியர் ஸ்ரீ C. சுந்தரலிங்கம் M. A.)

(முற்றொடர்)

இங்கிலாந்தில் உண்மையான ஜனநாயக ஆட்சி நிலவுகின்றது; இதனை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அங்கே ஒருவன்—அவன் எக்குலத்தில், எச்சாதியிற் பிறந்தவனே யாயினும்— உண்மையில் திறமையுடையவனேல், அவனுக்கு மகோந்நத பதவிகள் அளிக்கப்படுதல் கண்கூடு. அங்கே அரசியலிலோ, அன்றேல் உத்தியோகப்பதவிகளிலோ சாதிப் பிரச்சினை நுழைவது இல்லை. அரசியலில் கட்சி பேதம் கவனிக்கப்படுகின்றது உத்தியோக விஷயத்தில் பரீட்சைச் சித்தி கவனிக்கப் படுகின்றது. இங்கிலாந்தில் இந்தமுறை பிசகாமல் பின்பற்றப்பட்டு வருவதால், ஓர் செம்மான் மருகன் பிரதம மந்திரியாய் வந்தார். ஓர் சில்லறைக் கடை வியாபாரியின் மகன் பல பிரபுக் குடும்பத்தைவரையும் தாண்டி மகோந்நத பதவி வகித்தார்.

### இற்றலியில்

இற்றலியிலும் இப்படித்தான்: இப்போது அந்நாட்டின் சர்வாதிகாரியாய், உலகம் முழுவதையும் தன் கர்ச்சனையினுல் நடுநடுங்கச் செய்யும் முசோலினி யார்? அவர் ஓர் கொல்லன் மகன் தானே. உண்மையில் திறமுடையானுக்கே பொறுப்புவாய்ந்த பதவிகள் அளிக்க வேண்டுமென்பது முஸோலினியின் பாஸிஸ்ற் கொள்கையாகும். ஜப்பானில் உத்தியோக நியமன விஷயத்தில் பட்சபாதம் காட்டப்படுவதில்லை. இதற்கென ஓர் சங்கம் அங்கேயுண்டு. பட்சபாதம் நிகழ்வதை இச்சங்கம் கண்டிப்பாகத் தடுக்கின்றது.

### துர் அதிர்ஷ்டமே

நமது இலங்கை துர் அதிர்ஷ்டவசமாக இப்படி முற்போக்கான நிலைமையை இன்னும் அடையவில்லை. அராசங்க சபைத் தெரிவில் ஓர் அபேட்சகரின் திறமை கவனிக்கப்படுகின்றதில்லை ஓர் அபேட்சகர், தான் வெற்றிபெறுதற்குத் தன் தந்தை, அல்லது பெண்கொடுத்த மாமனின் செயல்களைப்பற்றிப் பறையடிக்கவேண்டியிருக்கிறது. இதில் தவறினுல், அவர்க்குக் கள்ளுத்தவறணை அல்லது சாராயத் தவறணை வெற்றியளிக்கிறது. நகரசங்கங்களிலும் இதே கதைதான்! கேவலம் ஓர் கிளார்க் வேலைக்கு பீ. ஏ. பட்டதாரிகள் மநுச் செய்தால், அந்தவேலை அவர்களுக்குக் கிடைக்கின்றதில்லை. ஸீனியர்ப் பரீட்சையிற் சித்தியெய்தா ஒருவர், அவன் சங்கத்தலைவரின் நெருங்கிய சுற்றத்தாராயிருப்பின் அவர்க்கு அந்தப் பதவி கிடைத்துவிடுகிறது.

### இன்னும் உதாரணங்கள்

மணியகாரன் வேலை ஒன்று காலியாக வந்தவுடன், உள்நாட்டு மந்திரசபையில உள்ளவர்க்குத் தொல்லை அதிகரிக்கிறது. அந்தப்பதவிக்கு அபேட்சகராவார், தம் திறமையைப் பயன்படுத்தாது ஷ சபையில் உள்ள அங்கத்தவர்கள் மூலமாகத் தம் காரியத்தை முடிப்பிக்கின்றனர். இப்படியான அபேட்சகர்க்கும், மந்திர சபையினர்க்கும் இடையே நடமாடிக் காரியம் முடிப்பதையே தொழிலாகக்கொண்ட தாகர்மாரும் சிலர் உளர்.

### பயன் என்ன?

இப்படியான ஊழல்கள் இலங்கையில் நடக்கின்றன என்று ஆதாரமற்ற வதந்திகள்தானும் பிறந்தால், கிடைக்கும் பயன் என்ன? படித்த வாலிபர்கள் மனஞ் சோர்வடைகின்றனர். படித்துத் திறமையடைவதிலும் பார்க்க, அத்திறமையின் மூலம் ஜீவனோபாயம் தேடுவதிலும் பார்க்க, பிறபக்கக் கதவாற் சென்று உத்தியோகம் சம்பாதிப்பது சுலபம் என்று எண்ணிக் கொள்ளத் தலைப்படுகின்றனர். பெரும் மனுஷராயுள்ளவரின் தயவை, நட்பைச் சம்பாதித்துக்கொண்டாற் போதும், படித்துத் திறமையடையத்தேவையில்லையென்று இவ்வாலிபர் எண்ணினுல் நாட்டிற்குக் கதி மோட்சம் கிடைப்பது எப்போது? இப்படியான எண்ணம் பரவியமையே இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் ஓர் காரணம் எனலாம்.

### அடுத்த உத்தியோகம்

பத்திரிகைகளிலும் "கஸற்" பத்திரிகையிலும் ஓர் உத்தியோகம் விளம்பரப் படுத்தப் படுகிறது. இதில். இம்முறை வாய்க்கவில்லை என்று கண்டவுடன், அடுத்த விளம்பரம்எப்போது வரும் என்று இப்படித்த வாலிபர் அங்கலாய்ப்புடன் காத்து இருக்கின்றனர். தங்கள் திறமையினுல் அவ்வுத்தியோகத்தைப் பெறலாம் என்று இவர்கள் காத்திருக்கவில்லை: இன்னுரைக்கண்டு, அவர் மூலமாக அதனைப் பெறலாம் என்பதே இவர்களின் நம்பிக்கை. கடைசியில், இவர்கள் நிலைமை இலவுகாத்த கிளிபோலாகின்றது. ஈற்றில், இவ்வாலிபர் உத்தியோகம் பார்க்க முடியாத அந்த நிலைமைக்கு வந்து விடுகின்றனர்: இது மிகவும் கேவல நிலைமை: இக் கேவலநிலைமை பரிகரிக்கப்படல் வேண்டும். இதற்கு நம் தலைவர்களாயுள்ளாரே முன்மாதிரி காட்டவேண்டும். நாட்டில் நேர்மை, நீதி, பட்சபாதமின்மை என்பன நிலவவேண்டும்.

---

# இற்றலியின் அட்டூழியம்.

## பெண்களை ஹிம்சிக்கின்றனர்.

## கிராமங்களில்அக்கினிச்சுவாலை.

கல்கத்தா "அமிர்த் பஜார்"ப் பத்திரிகையின் அடிஸ் அபாபா நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:-

"இற்றலியர் சமீபகாலத்தில் அடைந்த தோல்வியின் பின், புறங்காட்டி ஓடினர். அப்போது ஷயர்மாசாணத்திலும் தெம்பியனிலும் அவர்கள் செய்த அட்டூழியங்களோ மிகக் கொடியவை; நாவினுற் பகர இயலாதன காட்டு மிருகங்கள் தானும் அவ்வட்டூழியங்களைக் கேள்விப்படுமாயின், தம்மை இற்றலியர் வென்றுவிட்டனரோ என வெட்கித் தலைகுனியும்.

"இந்த இற்றலிய கோழைகள், ஆண்டன்மையற்ற பேடிகள், நிராயுதரான சில உத்தியோகத்தரைக் கூவு இரக்கமின்றித் தம் கண்ணில் தென்பட்டவுடன் ஒரே வெட்டாய் வெட்டிக் கால் வேறு தலை வேறாக்கினர். தேவாலயங்களை எரித்தனர், தகர்த்தனர்; கிராமங்களில் அக்கினியைச் சொரிந்து சங்கரம் செய்தனர். பெண்களைச் சிறையாக்கினர் சிறையாக்கிவாயாற் பகரதப் அவர்களை வருத்தினர். சித்திரவதை செய்தனர், ஈவு இரக்கமின்றி இளையார், முதியார் என்ற பேதம் இன்றிக் கொன்றனர்."

---

# ஒப்புயர்வற்ற உன்னதக் காங்கிரஸ்

1ம் பக்கத் தொடர்ச்சி.

எழுப்புகின்றனவாம் இது உண்மையோ இல்லையோஎன்றுநான்பரிசீலனை செய்ய விரும்பவில்லை, என்றாலும் இலங்கைக் காங்கிரஸ் புலிகளோ வெளியில் ஒருவருடமாகத் தூங்கி எழுப்புகின்றன. இப்படியான இலங்கை காங்கிரசினுல் இலங்கையருக்கும் இந்தியரைப்போல தேசப்பற்று உண்டாகுமா? இலங்கை அதிகாரவர்க்கத்தாரகலக்குவார்களா பட்டப் பதவிகளைத் துரும்பென மதித்துத் தேசத் தொண்டாற்றும் தேசியவீரர்கள் உண்டாவார்களா. பொருளையும் புகழையும் உடலையும் தியாகஞ் செய்யும் தியாகப் புருஷர்கள் இலங்கையிலும் முன்னெழுவார்களா என்பது தானையா எனது கேள்வி.

# ஹிந்து மதத்தின்மீது வீண்பழி ஏன்?

## சமத்துவமே மதத்தின் அடிப்படை.

## மதம்மாறும் யோசனைக்கு ஆக்ஷேபம்

## ஸ்ரீமத் சங்கராச்சாரியரின் விளக்கம்

ஹிந்து மதமானது சமத்துவமின்மையை ஆதாரமாகக் கொண்டிருப்பதாக டாக்டர் அம்பேத்கார் பன்முறை வாதித்துவருகிறார். இந்த வாதம் முற்றிலும் ஆதாரமற்றதாகும். தற்கால வழக்கங்கள் எப்படியிருந்தபோதிலும் ஹிந்து மதமானது மனிதர் தேவதாம்சம் வாய்ந்தவர் என்பதை ஆதாரமாகக் கொண்டது. ஹிந்து மதமானது சமத்துவமின்மையை ஆதாரமாகக் கொள்ளவில்லை. அது சமத்துவத்தையே ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. டாக்டர் அம்பேத்கார் வேறொரு மதத்தைத் தழுவுவதெனச் செய்துள்ள முடிவைக் கேட்டு மிக்க வருந்துகிறேன். அவர் வேறு மதத்தைத் தழுவுவதற்குக் கூறுங் காரணங்களைக் கேட்கும்போது அதைவிட அதிக வருத்தமுண்டாகின்றது. அவரால் வெறுக்கப்படும் ஸ்மிருதிகளைப் பார்த்தால் ஹிந்த மதமானது தத்துவ ஞானத்தையும் பகுத்தறிவையும் ஆதாரமாகக்கொண்டிருப்பதைக் காணலாம். பிரமாணங்களையும் மேற்கோள்களையும் எடுத்துச் சொல்லுவது வெறும் வாக்குவாதமே ஏற்படும். அவை இவ்விடத்துக்குப் பொருத்தமானதல்ல

தத்துவஞான ஆதாரம் எக்காலத்திலும் மாருமல் பொதுவாக இருந்து வந்திருக்கிறது. மதக் கொள்கைகளை அனுஷ்டிக்கும் முறைதான் காலத்திற்கேற்றபடி மாறி வந்திருக்கிறது. தலைவர்களுக்கு, மூலாதாரக் கொள்கைகளுக்கு முரண்படாமல் காலத் தேவைக் கேற்றபடி மாறிக்கொள்ள சர்வாதிகாரமுமிருக்கிறது.

தற்போது தேசத்திலுள்ள சட்டங்கள், ஸ்மிருதிகளில் கண்ட பல விஷயங்களையும் வழக்கங்களையும் ஏற்க மறுக்கின்றன. அவை மத சமூக சம்பிரதாயங்களையும் ஏற்க மறுக்கின்றன சட்டம் ஸ்மிருதியில் உசிதா உசிதமறிந்து சிலவற்றை நிராகரிக்கிறது. நிர்வாக அதிகாரம் நம் வசமிருந்தால் நாம் இந்த உசிதா உசித அதிகாரத்தை தற்போதைக் காட்டிலும் அதிகமாக உபயோகிக்கலாம். நிர்வாகிகளின் வாழ்க்கை நோக்கத்திற்கு இணங்கியதாக இராதவழக்கங்கள் கடுமையான முறையில் அடக்கப்படுகின்றன. வெகு காலத்திற்கு முன்பேரத்துச் செய்யப்பட்டிருக்கவேண்டிய சில வழக்கங்களுக்கு ஆக்கமளிக்கப்படாவிட்டாலும் அதற்கு மௌனமாக உடந்தையாக இருக்கின்றனர். அவற்றை அனுமதிக்காவிட்டாலும் அங்கீகரிக்கின்றனர்.

தீண்டாமைக்கு விரோதமான உணர்ச்சி நாளுக்கு நாள் பொது ஜனங்களிடை வலுத்து வருகிறது. ஆலோசனா சக்தியுள்ள ஒவ்வொரு ஹிந்து தலைவரும் தீண்டாமை வழக்கத்தைத் திட்டமாகக் கண்டித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்மிருதியும் அவர்களால் பன்முறை பரிசீலித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. அவை தீண்டாமை ஹிந்துமதத்தின் அடிப்படையான தத்துவமாக இருந்ததில்லை. இதைப்பற்றி தகராறே இருக்கமுடியாது. இதனால் ஹிந்துமதத்தைக் கண்டித்து தனது மதத்தை விடுவதற்கான காரணமாக அதைச் சொல்லுவது சரியல்ல. டாக்டர் அம்பேத்கார் ஹிந்துமதத்தை விட்டுப்போகலாம் ஆனால் ஹிந்துமதமானது சமத்துவமின்மையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது, அல்லது அது கெட்ட வழக்கத்திலிருந்து தன்னை விடுத்துக் கொள்ளமுடியாது என்ற காரணங் கொண்டு அவர் இதனை விட்டுப் போகக்கூடாது. அன்னிய மதத்தைத் தழுவும் விஷயத்தில் ஹரிஜனங்கள் அவரைப் பின்பற்றமாட்டார்களென நான் நிச்சயமாகக் கருதுகின்றேன். என்னைக்கண்டு பேசிய அகில இந்திய ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சங்கப் பொதுக்காரியதரிசி ஸ்ரீ.ரசன் ராஜபோஜ் ஹரிஜனங்கள் ஹிந்து சமூகத்தை விட்டுப்போக மாட்டார்களென்றும், அதிலிருந்தே தங்கள் உரிமையைப் பெறுவதற்காகப் போராடுவார்களென்றும் கூறினார்.

டாக்டர் அம்பேத்கார் ஒடுக்கப்பட்ட வகுப்பினர், ஹிந்து மதத்தை விட்டுப் போகவேண்டுமென்னு யோசனை புகன்றிருக்கிறார். ஸர் உமார் சார்லஸ் ரைஸ் ஸ்டூவர்ட் என்ற முஸ்லீம் பிரபு ஹாஜ யாத்திரைக்குப் புறப்படும்போது பம்பாயில ஒரு மாகாணத்தில் 3 கோடி ஜனங்கள் முஸ்லிம்களாவார்களென பெருமை பேசிக் கொண்டார். விஷம சக்திகள் வேலைசெய்து வருவதாக நான அஞ்சுகிறேன் டாக்டர் அம்பேத்காருட ஹரிஜனங்களும், வெளியூர்கள் மதம் மாற்றுவதற்காக உபயோகிக்கையில் சக்திகளை எதிர்த்து நிற்கப் போதிய சக்தியுடையவர்களாகஇருப்பார்கள் என்று நம்புகிறேன். நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து எல்லோரும் வாழ வேண்டும். வாழ்க்கைத் தத்துவத்தையுடைய உலகில் வசித்து வருகிறோம் நாம் உலகில் சுயேச்சை யடைந்த பல தேசத்தாரையுங் கொண்ட சமராஜ்யத்தை ஸ்தாபிக்க முடிவுகிறோம் சர்வமத சகோதரத்துவ உணர்ச்சியை ஏற்படுத்த முயலுகின்றோம். இப்படிப்பட்ட சமையத்தில் ஒரு மதமே உலகில் ஆதிக்கம் பெறவேண்டு மெனவும் ஒரு தேசமே உலகத்தையெல்லாம் ஆள வேண்டு மென்றும எண்ணுவது சாத்தியமில்லை. இதனால் நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக வாழுவோமாக நாம் ஒரே மாதிரியாக வாழ முயற்சி செய்யாமல் இருப்போமாக. நான் மேற் கொண்டுள்ள வேலையைத் தொடர்ந்து செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். சமீபத்தில் இதில் வெற்றி பெறுவேனென நினைக்கிறேன். ஏனெனில் நான் மத சம்பந்தமான அம்சத்தை மாத்திரமின்றி ஹரிஜனங்களின் லௌகிகத் தேவைகளையும் சல்வித் தேவைகளையும் இதர தேவைகளையும் பற்றிக் கவனித்து வருகின்றேன்.

## 15 கோடி பவுண்.

லண்டனில் மிகவும் அதிகமான போக்குவரத்துக் கொண்ட ஒரு தெருவில் ஒரு கட்டிடத்தின் கீழே உலகத்திலேயுள்ள மிகுந்த ஜாக்கிரதையான அறைகள் சில இருக்கின்றன. பிரிட்டிஷ் அரசாங்க பாங்கியின் 15 கோடி பவுண் பெறுமான பொன் அவ்வறைகளில் ஜாக்கிரதையாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரும்பு அறைகள் பெரும் பணச்செலவு செய்து கட்டப்பட்டவை. இவை நெருப்பு வெள்ளம் இடி இவற்றிற்கு நன்றாக ஈடுகொடுக்கும். இந்தப் பொக்கிஷ அறைகளின் மின்சாரச் சாவிகள் 2 பேர் கையில் இருக்கின்றன. இந்த அறைகள் சென்ற 10 வருஷங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 5 வருஷத்தில் இவை முடிவு பெறும். லண்டனில் இதுவரையில் இம்மாதிரி இவ்வளவு அதிக செலவுசெய்து ரகசிய அறைகள் கட்டப்பட்டது கிடையாது,

## கடிதம்.

### யுவவருடவிநாயக சட்டி.

இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்களுக்கு.

அன்பார்ந்த ஐயா,

சென்ற வியாழக்கிழமை வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் 'விநாயக சஷ்டி' என்னுந் தலைப்பின் கீழ், திருவாளர் ஆ. சோமசுந்தரம் அவர்கள், சிவியாதெரு சித்திவிநாயகர் கோவிலில் விநாயக சஷ்டி பூசை நடைபெற்ற தினத்தைப்பற்றிக் குறிப்பாக எழுதியிருக்கிறார். திருக்கணித பஞ்சாங்கத்திலும், சுப்பிரமணிய சாஸ்திரிகளின் வாக்கிய பஞ்சாங்கத்திலும், மார்கழி மீ 15-ம் திகதி விநாயக சட்டிப் பூசைத் தினமாகக் குறிப்பிட்டிருக்கிற தென்றும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் விநாயகசட்டிப் பூசைத் தினம் மார்கழி மீ 16-ம் திகதியன்று நடைபெற வேண்டியதாகக் குறிக்கப்பட்ட தென்றும். மேற்படி கடிதத்தில் எழுதப் பட்டிருக்கிறது. சிவியாதெரு சித்திவிநாயகர் கோவிலில் மார்கழி மீ 16-ம் திகதி செவ்வாய்க்கிழமையை விநாயக சஷ்டிப் பூசைத் தினமாகக் கொண்டதற்கு நியாயம் பின்வருமாறு.—

பகல் மானத்தை ஐந்து கூறுகளாகப் பிரித்தால், நடுக் கூறுகிய மத்தியான்ன காலம் பகல் 12 நாழிகை தொடக்கம் 18 நாழிகை வரைக்கும் இருக்கும். இந்த மத்தியான்ன காலமே விநாயகமூர்த்திக்கு உகந்தகாலம். விநாயகருக்கு விசேடமாகச் செய்யப்படும் பூசைகளெல்லாம் மத்தியான்ன காலத்தில்செய்யப்படுவது விசேடம். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தின் படி விநாயகசஷ்டி மார்கழி மீ 15-ம் திகதி திங்கட்கிழமை பகல் 24 நா 36 வி தொடக்கம் அடுத்த நாள் மார்கழி மீ 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை 18 நா 58 வி வரைக்கும் நிற்கிறது. திருக்கணித பஞ்சாங்கத்தின் படி விநாயகசஷ்டி மார்கழி மீ 15-ம் திகதி திங்கட்கிழமை 19 நா 23 வி தொடக்கம் அடுத்த நாள் மார்கழி மீ 16-ம திகதி செவ்வாய்க்கிழமை 13 நா 48 வி வரைக்கும் நிற்கிறது. சுப்பிரமணிய சாஸ்திரிகள் வாக்கிய பஞ்சாங்கத்தின் படி விநாயகசஷ்டி மார்கழி மீ 15-ம் திகதி திங்கட்கிழமை 24 நா 24 வி தொடக்கம் அடுத்த நாள் மார்கழி மீ 16-ம திகதி செவ்வாய்க்கிழமை 18 நா 46 வி வரைக்கும் நிற்கிறது. மூன்று பஞ்சாங்கங்களிலும் மார்கழி மீ 15-ம் திகதி திங்கட்கிழமை யன்று மத்தியான்ன காலத்தில் விநாயக சஷ்டியின் வியாபகமில்லை. மூன்று பஞ்சாங்கங்களிலும் மார்கழி மீ 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை யன்று மத்தியான்ன காலத்தில் விநாயகசஷ்டியின் வியாபகம் இருக்கிறது விநாயகசஷ்டி விநாயகருக்குரிய விசேட விரத பூசைத் தினமாயிருப்பதாலும், மத்தியான்ன காலம் விநாயகரை வழிபடுவதற்கு சிறந்தகாலமாயிருப்பதாலும் மார்கழி மீ 16-ம் திகதி செவ்வாய்க்கிழமையை விநாயகசஷ்டி தினமாகக் கொள்ளத் தக்கது என்பது எனது அபிப்பிராயம். அப்படியே சிவியாதெரு சித்திவிநாயகர் ஆலயத்திற் கொள்ளப்பட்டது. மூன்று பஞ்சாங்கங்களிலும் மார்கழி மீ 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை யன்று வியாபிக்கும் சஷ்டி சதயத் தொட்ட சஷ்டியாயிருக்கிறது. அப்படியிருக்க திருக்கணித பஞ்சாங்கத்திலும், சுப்பிரமணிய சாஸ்திரிகளின் வாக்கிய பஞ்சாங்கத்திலும் மார்கழி மீ 15-ம் திகதியை விநாயகசஷ்டி தினமாகக் கொண்டதின் நியாயம் எனக்குத் தெரியவில்லை.

இங்ஙனம்

தங்கள் ஊழியன்

கா. அருளம்பலம்

சிவியாதெரு.

5-1-36.

# நம்மவர் பிடிவாதம் அந்நியர் அநுதாபம்.

## சாவகச்சேரி வெள்ளப் பெருக்கில் நடந்தது சங்கத்தலைவரின் யதேச்சாதிகாரம்.

## மாகாணத்தலைவர் கண்ட நிலைமை.

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா!

சென்ற மாதம் இங்கே நிகழ்ந்த வெள்ளப்பெருக்கினால் இங்குள்ளார் பட்ட கஷ்டங்களோ அனந்தம், இவ் வெள்ளத்தை, வளவுகளுக்குள் நிற்காதபடி பாயச்செய்யவேலையில் இங்கேயுள்ள தலைமைக்காரர், கிராமச்சங்கத்தலைவர் என்பவர் செய்த ஓர் கர்மம், ஏழைகளுக்குச் சொல்லொணு இன்னல்தர ஏதுவாயிருந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக மாகாணத்தலைவர் பிரவேசித்து எம் துறையை நீக்கினர்.

நிற்க, இதுகாறும் சாவகச்சேரி பருத்தித்துறை ரோட்டுக்கணித்தாகவுள்ள வளவுகளின் வெள்ளம் பெருக்கற்குளப் பக்கமாகவே ஓடும் படி விடப்பட்டுவந்தது. ஆனால் சென்ற 22-12-35இல் கிராமச் சங்கத்தலைவரும் தலைமைக்காரரும் மணியகாரரும், இதுகாறும் அனுசரிக்கப்பட்ட முறையைக்கைவிட்டு, ஷெ வளவுகளுக்குள் இருந்த வெள்ளத்தை அருளம்பலம் என்பவரின் வளவுக்குள்ளாக, கற்குளிக்குச் செலுத்த எத்தனித்தனர். இவ் வெள்ளம் கற்குளிக்கு வருமானல் அவ்விடத்திற் குடியிருப்போர் சொல்லொணுக் கஷ்டங்களுக்காளாவர் மலேரியாநோய் தாண்டவமாடும்.

இப்படி, இதுகாறும் செய்துவந்த முறையை மாற்றியமைக்குக் காரணம் என்ன? மணியகாரன், அவரின் மைத்துனர் பிறக்கிராசியார், அவரின் மைத்துனரான ஓர் உபாத்தியாயர் என்பவர்கள் வசிக்கும் இடமாகிய கண்டுவிற் பக்கமாகவே இதுகாறும் வெள்ளம் விடப்பட்டது. அவர்களின் நன்மைக்காகவே, இப்போது இந்த முறை மாறறப்பட்டது எனப பகிரங்கமாக ஏழைகள் சொல்கின்றார்கள். அந்தோ, இது நீதியா? முறையா?

இந்த அநியாயத்தைப்பற்றி ஏழைகளாயுள்ள நாம் தந்திக்குமேல் தந்தி அனுப்பி மாகாணத் தலைவரைக் கூப்பிட்டு, உள்ள நிலைமையை எடுத்து விளக்கினேம். உண்மையை யுணர்ந்த மாகாணத்தலைவர், பழையபடியே வெள்ளம் போகவேண்டுமென உத்தரவிட்டார். என்னே! எம் சொந்த மனுஷரின் நிலைமை! இந்த அன்னிய மநுஷனுக்கு இந்த ஏழைகள் மீது இருந்த அநுதாபம், இரக்கம், விஷயத்தை அறிந்து உணருந் தன்மை, நம்மவராயவர்க்கு இல்லாமற் போய்விட்டனவே! மாகாணத் தலைவர் இதிற் பிரவேசித்திருக்காவிட்டால், நாம் "யாரோடு நோவோம், ஆர்க்கெடுத்து உரைப்போம் ஆண்டே நீ அருளிலீர் ஆனால்" என்று புலம்ப வேண்டுமே! இது ஒரு பக்கம்:

எமது கிராமச்சங்கமே முன்னேற் றமடைந்திருக்கிறது என்பதாக ஓர் முறை பாராட்டி எழுதியிருக்கிறீர்கள் என்பதை யறிந்து நாமும் சுதேசாபிமானம் கருதி மகிழ்கின்றோம்தான்; ஆனால் எமது நிலையையும் உள்ள உள்ளவாறு காட்டுதல் அவசியம் தான்.

மேலே காட்டப்பட்டுள்ள கற்குளிக்குச் செல்லும் கையொழுங்கைக்கு இதுகாறும் வருடந்தோறும் வெள்ளம் நிற்காமல் தடுப்பதற்காக ஓர் தொகைப் பணம் செலவழிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த ஒழுங்கையை—மட்டிபோட்டு உயர்த்திய ஒழுங்கையை—வெள்ளம் பாய்வதற்காக வெட்ட முனைந்தால், இதுகாறும் செலவழிக்கப் பட்ட பணத்தின் பிரயோசனம் என்ன? பொதுப் பணத்தை இப்படிக் கண்டபடி யதேச்சாதிகாரமாகச் செலவு செய்தால், இதற்குக் கேள்விமுறை இல்லையா? இப்பணம் ஒருவர் இருவரின் ஸ்ரீதனம் அல்லது முதுசொத்தா! நிற்க,

பெருங்குளப் புதுரோட்டு மதகு இப்போது தண்ணீர் பாய முடியாத அவ்வளவு சிறிதாயிருப்பதையும் நம் கிராம தாதாக்கள் கண்ணுக் காணவில்லையா? அதனை இருகண் மதகாக்கி விட்டால், வெள்ளம் சுலபமாய்ப்பாய, அதனால் ஊரவர்களுக்கு நன்மைபயக்க முடியாதா?

இவற்றை நம் கிராமச்சங்கத்தவரும், தலைவரும் மற்றும் உள்ளோரும் சிந்தித்தால் என்ன?

இங்ஙனம்,

ப. முருகேசு.

சாவகச்சேரி.

1-1-36.

## யாழ்ப்பாணம் சுகாதாரச் சங்கம்.

ஜனவரி மாதம் 27-ம் தேதி தொடக்கம் பிப்ரவரி மாதம் 1-ம் தேதி வரைக்கும், யாழ்ப்பாணத்திற் சுகாதாரவாரம் நடாத்துவதென யாழ்ப்பாணச் சுகாதாரச் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

## கொக்குவில் மேற்கிற்கு ஓர் விதானை.

கொக்குவில் மேற்குப் பொதுஜன சேமச் சங்கத்தின் கூட்டம் ஒன்று சென்ற 3-ம் தேதியன்று கூடியது. கொக்குவில் மேற்கிற் கெனப் பிரத்தியேகமாக ஓர் பொலிஸ் விதானை நியமிக்கப்படல் வேண்டுமென அக்கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## அதிக பிரிட்டிஷ் மோட்டக் கார்கள் ஏற்றுமதி.

இங்கிலாந்தில் 1935 ல் மோட்டக் கார் முதலியவைகளின் ஏற்றுமதியானது முந்திய வருஷத்தைவிட 1,000,000 பவுணுக்குமேல் அதிகமாகவும் மொத்த ஏற்றுமதியாகிய 12,000,000 பவுணை விடக் கூடுதலாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கேகாலையில் மீண்டும் மலேரியா.

கேகாலைப் பகுதியில் மலேரியா மீண்டும் பரவிவிட்டதென்றும், ஆஸ்பத்திரிகள் யாவும் நோயாளிகளால் நிரம்பப் பட்டன வென்றும் ஓர் செய்தி கூறுகிறது.

### பல்வைத்திய விளம்பரம்.

யப்பானிய பல் வைத்தியரான எஸ் இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்வம் பில்டிங்கில் நிகழும் ஜனவரி மாசம் 7ந் திகதி தொடக்கம் 17ந் திகதி வரையில் பல் வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பர்.

(Mis 247. 9 & 13 1-36)


வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹு
மார்கழிமீ உடுவ வியாழக்கிழமை

## இவர்களுடைய நோக்கம் என்ன?

அடுத்த அரசாங்க சபைக்கு அங்கத்தவர்கள் ஊரவர்களைக் கொண்டு தங்களைத் தேர்தல் செய்வித்துப் போய்ச் சேரும் காலமும் சமீபித்துவிட்டது; இங்குள்ள நான்கு தானங்களுள் ஒன்று தவிர ஏனைய மூன்றும் எதிரிடையான பல அபேட்சகருடன் காணப்படுகின்றன. இந்த அபேட்சகர்களுட் சிலர் தாம் அநுகூலமடைந்தாலென்ன, அடையாதொழிந்தாலென்ன, முறைக்கு முறை முற்பட்டு வரும் அபேட்சகர்களுக்குத் தாம் இடையூறாக நின்று மரண பரியந்தம் அபேட்சித்து நிற்பதுதான் விரதமெனக் கொண்டுள்ளார் போலும். முற்பட்டு நிற்கும் அபேட்சகரிடம், தாம் இப்படி அபேட்சகரென வெளிவிட்டால், ஏதும் பணம் பெறலாமென்ற நோக்கத்துடனும் சில அபேட்சகர் இங்கே வெளிப்பட்டு நிற்கின்றனராம். இவர்கள் அரசாங்க சபை அபேட்சகரல்லர் போலி அபேட்சகராவர்; இப்படியானோர் விஷயத்தில் நாம் அதிகம் பிரவேசிக்க வேண்டியதில்லை.

இவை கிடக்க, உண்மையான அபேட்சகராயுள்ளோர் தாமும், தாம் அரசாங்க சபையில் எதுவிதத்திலும் புகுந்துவிடல் வேண்டுமென்ற சிந்தனையோடும் முயற்சியோடுங் காணப்படுகின்றனரேயல்லாமல், தாம் அரசாங்கசபையுள், அதிஷ்டவசத்தாலோ, சனங்களின் துரதிஷ்டத்தினாலோ, புகவேண்டி நேர்ந்தாற் புகுந்தபின் அங்குத்தாம் நாட்டின் பொருட்டு ஊரவர்களின் நன்மையையிட்டு எவ்வெவற்றைச் செய்யப்போகின்றனர், எப்படி உழைக்கப்போகின்றனர் தங்கள் நோக்கம் என்ன என்னும் இவைகளைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமல் மௌனஞ்சாதிக்கின்றார்களே! இதற்குச் செய்வதென்ன? முந்திய முறை அரசாங்க சபைக்கு இங்கிருந்து சென்ற நால்வரும், தாங்கள் அரசாங்கசபைப் பகிஷ்காரக் கட்சியினர்க்கு மாறானவர்களெனவும் சிங்களருடன் மாறுபட்டுச் சுவதந்திரத்தின் பொருட்டு வாதாடி உழைத்தற்குச் சித்தமானவர்களென்றாயினும் தெரிவித்துவிட்டுப் போனார்களே, இப்பொழுது முற்பட்டு நிற்பவர்கள் தங்கள் நோக்கம் கொள்கைகளுள் ஒன்றையாயினும் வாய்திறந்து சொல்லுகிறார்களில்லையே!

இலங்கையிலே சிங்களநாக்காட்டிலும் தொகை குறைந்த வகுப்பினராகவுள்ள தமிழ் மக்களுக்குப் பல குறைகளும் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கின்றனவே; இந்த வட இலங்கையிற் செய்யவேண்டியவும், அரசினரைக் கொண்டு செய்விக்கவேண்டிய பல கருமங்கள் இருக்கின்றனவே. இலங்கையின் ஏனைய மாகாணங்களிலே தொழின் முயற்சியின்மை, உத்தியோகம் அகப்படாமை, பணமுட்டு, வியாபார வீழ்ச்சி யென்னுமிவைகள் ஒருவாறு ஒழிந்துவர, கைத்தொழில் கமத்தொழில் வியாபாரமென்னுமிவை விருத்தியடைந்துவர, இந்த யாழ்ப்பாணமானது முந்திய கேவலமான நிலையிற்றானே இருக்கின்றது. இந்தக் குறைகளை நீக்கி பிந்தியவைகளை விருத்தி செய்வதற்கு நமது அபேட்சகராய் நிற்பவர்கள் மனங்கொள்ளவில்லையா? பல்லாயிரக் கணக்கான வாலிபர்கள் ஆங்கிலம் படித்துவிட்டு ஏதும் முயற்சியின்றி உத்தியோகப் பிராந்திகொண்டு பூமிக்குப் பாரமாயிருக்கின்றார்களே! இவருட் பலர் சாத்தானுடைய கருவிகளை நாட்டிலே ஆற்றத் தலைப்பட்டுக் கொண்டார்களே; இவர்களை இப்படியே கெட்டுப்போக விடுவதா? இவர்கள் உய்வதற்கு மார்க்கங்கள் தேடுதல் இந்த அபேட்சகர்களுடைய பிரதானகடனல்லவா?

இனி, மதுபானமென்னும் பெரிய தீமை யாழ்ப்பாணம் முழுவதும் பரந்து பலரைத் தூர்த்தராகவும் கோலைகாரர் கள்வராகவும் தரித்திராகவும் மடியராகவும் களியராகவும் வியபிசாரிகளாகவும் சூதராகவும் ஆக்கிவிட்டதே! இதனை அகற்றுவதற்கு இவ்வபேட்சகர் ஏதும் மார்க்கந்தேட நோக்கங்கொள்ளவில்லையா?

பூநகரிப் பாலம் புங்குடுதீவுப் பாலம் என்ற பாலப் பிரேரணைகளும் முயற்சிகளும் அந்தந்தப் படியே நின்றுவிட்டனவே; இப்பாலங்களை நிறுவித்து நாட்டிலுள்ள சனங்களின் சஞ்சாரத்தை வசதிப்படுத்தவும் வேளாண்மை வியாபாரம் என்னுமிவைகளை இப்பாலங்கள் வாயிலாக விருத்தியாகச் செய்யவும் இந்த அபேட்சகர் நோக்கங்கொள்ளவில்லையா?

### உத்தியோக நியமனம்

இது விஷயமாக கொழும்புச் சர்வகலாசாலைப் போசிரியரும், இலங்கை அறிஞர்களில் தலைசிறந்தவருமாய ஸ்ரீ C. சுந்தரலிங்கம் M A. அவர்கள் எழுதிய கட்டுரையினை இம் முறையும் சென்ற பிரசுரத்திலும் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ளோம். இச் சிறிய கட்டுரையினை வாசகநேயர்கள் தொடர்ச்சியாகப் படித்து அதன்கணுள்ள விஷயங்களைக் கிரகிப்பர் என்பதே எமது நம்பிக்கையாகும். உத்தியோக நியமன விஷயத்தில், அவ்வுத்தியோகத்தை அபேட்சிப்பவரின் திறமை இப்போது கவனிக்கப்படுகிறதில்லை. செல்வம், செல்வாக்கு, பரம்பரை என்பவற்றுடன் லஞ்சமும் இவ் விஷயத்தில் அதிகம் பங்கு பற்றுகின்றன என்று சரியாகவோ, பிழையாகவோ, படித்த வாலிபர்கள் இப்போது சிலகாலமாக எண்ணத் தலைப்பட்டுக் கொண்டனர்: டொனோமூர் அரசியல் அமுலுக்குவர, அதன் பயனாக உத்தியோக நியமன விஷயத்தில்மந்திர நிர்வாக சபையினர்க்கும் அதிகாரம் கிடைத்த பின், இந்த எண்ணம் தீவிரமாகப் பரவிவரலாயிற்று. தனித்தனியானவரின் செல்வம், செல்வாக்கு ஒருபக்கமிருப்ப, உத்தியோக நியமன விஷயத்தில், இப்போது அதிகாரம் வகித்திருக்கும் சிங்கள மந்திரிமார் வகுப்புவாதம் பாராட்டுகின்றனர் என்றும் பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது. இது சுத்த அபத்தம் உத்தியோக நியமன விஷயத்தில் வகுப்புவாதம் பாராட்டப் படுகிறது இல்லையெனச் சேர் பரன் ஜெயத்திலகாவும் சேனநாயக்காவும் கூரைமீதிருந்து கூவலாம்; ஆனால், வகுப்புவாதம் என்பதும் உத்தியோக நியமன விஷயத்தில் கவனிக்கப்படுகின்றது என்னும் வதந்தி ஆதாரமுடையதே யென்பது பலப்பிட்டியாப் பிரதிநிதியாயிருந்த மிஸ்டர் ஜீ. ருபெர்ட் டீ. சொய்சா இற்றைக்கு 2 ஆண்டுகளுக்கு முன் பிரதம காரியதரிசியைக் கேட்ட பின்வரும் கேள்வியில் இருந்து அறியலாகும்:-

உத்தியோகத்தரை நியமிக்கும் விஷயத்தில், மற்றவர்களிலும் பார்க்க சிங்கள வாலிபர்க்கே சலுகை காட்ட வேண்டுமென்று மந்திரிமார் அல்லது அல்லது அங்கத்தவர்களால் பிரதம காரியதரிசி தூண்டப்பட்டாரா?

இக் கேள்விக்கு எதிர் மறையாகவே விடைபகரப் பட்டதெனினும் அது தமிழ் மக்களுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. பின் நிகழ்ந்துள்ள நியமனங்கள் தமிழ் மக்களது அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் உர்ஜிதப்படுத்தின. நகரசங்கங்களுக்குச் சில பிரதிநிதிகளை நியமிக்கும் விஷயத்தில் மந்திரிகள் சிலர் மிகவும் அருவருக்கத்தக்க முறையில நடந்திருக்கின்றனர் எனப் பகிரங்கமாகவும் சொல்லப்பட்டது. தலைமைக்காரர் நியமன விஷயத்தில் மந்திர சபையினர் அந்தரங்கக் காரணங்கள் பற்றித் தகுதியற்றவர் எனச் சொல்லப்பட்டோர்க்குச் சலுகை செய்து மிருக்கின்றனராம்.

இனி, 3—வது வகுப்பு இளநிலைகல் உத்தியோகத்தர் நியமன விஷயமாகச் சிங்கள மந்திரிமார் நிறைவேற்றவிருந்த தீர்மானம், 2-வது வகுப்புக் கிளறிக்கற் பாடவிதானத்தை மாற்றியமை எனபன அவர்களது வகுப்பு அநுபாவத்தைத் தலாம்பரமாகக் காட்டா நிற்கின்றது எனபதே ஸ்ரீ மகாதேவா போன்றாது அபிப்பிராயம். ஸ்ரீ மகாதேவாவின கூற்றுக்கு ஆதாரமில்லாமல இல்லை. பெரும்பான்மையினரான சிங்களரது பக்ஷச்சாதிகாரத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே, தமிழர் கூடிய ஸ்தானங்கள் கேட்கின்றனர் என ஸ்ரீ மகாதேவா வாதாடுவது, இப்போதைய நிலைமையில் நியாயமே எனபதே எமது அபிப்பிராயமாயிருக்கிறது.

எது எப்படியிருந்த போதிலும் உத்தியோகத்தர் நியமன விஷயத்தில் சிங்கள மந்திரிமார் மிகவும் முறைகேடான முறையில் நடந்திருக்கின்றனர்; எனவே, இது விஷயத்தில் நம்மவர் இனிச் சாவதானமாய் இருத்தல் வேண்டும், அடுத்த அரசியற்றிருத்தம் வழங்கப் படும் போது, உத்தியோக நியமனவிஷயம அரசியல் வாதிகள்வசம விடப்படாவண்ணங் காண நாம்வாதாட வேண்டும் எனப் பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்கள் கூறுவதை நாமும் ஆதரிக்கின்றோம்.

# கண்ணோட்டம்.

### இதற்கென்ன சொல்வர்?

“தென் ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் பிரிட்டிஷார் ஆட்சிபுரிகின்றனர். பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியம் அப்படியே தொப்பென்று ஆகாயத்தில் இருந்து அவர்கள் கையில் விழவில்லை. வாளால் வெட்டியும், அக்கினியால் தகித்துமே பிரிட்டிஷார் தமது ஏகாபத்தியத்தை நிறுவினர். அப்படிப்பட்ட பிரிட்டிஷார் அபிசீனியா விஷயத்தில் எம்மைக் குறை சொல்ல முடியுமா?” என்று இற்றலியப் பத்திரிகைகள் இப்போது இங்கிலாந்தை நோக்கி ஆர்ப்பரிக்கின்றன. இற்றலியர் பிரிட்டிஷார் மீது சுமத்தும் இக்குற்றச்சாட்டுக்கள் ஆதார மற்றவையல்ல என்பதைப் பிரிட்டிஷ் இராஜதந்திரிகளே ஒத்துக் கொள்ள வேண்டும். உண்மையைக் கூறுங்கால் இங்கிலாந்து கண்ணாடி வீட்டினுள் வசிப்பவன் நிலையில இருக்கிறது. சமீபகாலத்தில் — ஏன் இப்போதும் தான் — இந்திய மக்களின் சுதந்திரக் கிளர்ச்சியை நசிப்பதற்குப பிரிட்டிஷார் இயற்றிய அடக்குமுறைச் சட்டங்களை உலகோர் சீக்கிரத்தில் மறந்து விட மாட்டார்கள். பிறர்மேற் குற்றங் காணும் போதுதான் நியாயத்தை எண்ணி சிந்திப்பது பிரிட்டிஷாரின வழக்கமல்ல. இது அவர்களின் பிறவிக் குணம் எனினும் பொருந்தும். பிரிட்டிஷார் உண்மையில் உலகசமாதானத்தை விரும்பியவரானால், நீதியை நிலைநாட்ட வேண்டும் என்னும் அவா உடையவரானால், தம் கீழ் உள்ள அடிமை நாடுகளுக்கு இன்றே அவற்றின் பிறப்புரிமையை வழங்குவாரா?

### இவர்களின் நோக்கம் என்ன?

இற்றலியின் அட்டூழியம் தாங்க முடியாததாயிருக்கின்றது என்பதனை கல்கத்தா அமிர்த பஸார் பத்திரிகையின் விசேஷ நிருபர் செய்தியில் இருந்து ஒருவாறு நாம் அறியக்கிடக்கின்றது. கேவலம் அநாதப் பெண்களையும், இந்தப் பேடிகளான — ஆண் தன்மையற்ற இற்றலிச் சண்டாளர் சித்திரவதை செய்து கொலை செய்து வருகின்றார்கள். அந்தோ! யுத்த தர்மத்திற்கு விரோதமாக இவ்வட்டூழியங்களைச் செய்யும் இற்றலியின் திமிரை அடக்க உலகவல்லரசுகளால், சர்வதேச சங்கத்தால் முடியாதா? என்று கேட்கிறோம். எண்ணெய் நிர்ப்பந்தத்தினால் மாத்திரமே இற்றலி அடங்கும். ஆனால் இற்றைவரை அந்நிர்ப்பந்தத்தைச் சர்வதேசசங்கம் விதிக்காததும் ஏனோ! சர்வதேச சங்கக் கூட்டம் கூட இன்னும் 10, 15 தினங்கள் இருக்கின்றன. இப்போதே பெருந்தொகையான எண்ணெயைச் சேகரித்து வைத்திருக்கும் இற்றலி, சர்வதேச சங்கம் கூடிப்பின்னெடி நிர்ப்பந்தங்களை விதிக்க யோசிக்குமுன், தனது யுத்தத்திற்குப் போதிய எண்ணெயைப் பெற்றுச் சேமித்துக் கொள்ளும் இதனைச் சர்வதேச சங்கம் நன்கு அறியும். அறிந்து கொண்டு, இனியும் வழவழா நியாயம் பேசுவதன் நோக்கம் என்ன? கொண்டானும் கொடுத்தானும் ஒன்று என்ற கூடேசிப் பழமொழிக்கு இலக்காக வேண்டி நாட்கடத்துவதா இவ்வெள்ளை வல்லரசுகளின் நோக்கம்?

### ஓர் வார்த்தை

அரசாங்கசபைப் பொதுத் தேர்தற் காலம் சமீபித்துவிட்டது அபேட்சகர்களும் தாங்கள் அநுகூலம் பெறுதற்கான முயற்சியில் தனித்தனி ஈடுபட்டுவிட்டனர். இச் சந்தர்ப்பத்தில் எமது நிலை என்ன என்பதை உணராத சிலர் எமது பத்திரிகைமீது விபரீத எண்ணங் கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர் என்பதை யறிந்து உண்மையில் வருந்துகின்றோம். இப்போது வெளிவந்துள்ள எந்த அபேட்சகர் மீதாவது தனிப்பட்டவர் என்ற நியாயத்தில் எமக்குத் துவேஷமும் இல்லை; அவர்களே வெற்றியடைய வேண்டுமென்ற ஆவலும் இல்லை. இன்னும் இவர்களில் எவரேனும் எம் சைவ பரிபாலன சபையில் அங்கத்தவருமல்லர் எமது பத்திரிகை நிர்வாகத்தில் எவ்விதமான அதிகாரம் படைத்தவரும் அல்லர். எனவே அவர்கள்விஷயத்தில்—தனி நேறுகவில்—நாம பட்சபாதம் காட்ட நியாயமும் இல்லை. இப் பத்திரிகையில் எக் கட்சியாளரும், எக் கொள்கையாளரும் தத்தம் கொள்கையை, கட்சியை எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் அளித்துவருகிறோம். அதனைப் பயன் படுத்தும் ‘சஞ்சையன’, “வாலவன்”, “ஸ்ரீதரன்” முதலாம் நிருபர்களின் அபிப்பிராயத்திற்கு நாம் பொறுப்பாளியல்லேம்; அந்நிருபர்களிற் சிலர் தம் கொள்கையை, கட்சியை ஹாஸ்யமாய் எடுத்துரைத்தால், நகைச்சுவையுடையார் அதனைப் பொருட்படுத்தவொண்ணாது என்பதனை நமது அபிமானிகளுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம். பொதுவாக இலங்கையர் யாவரும், சிறப்பாகத் தமிழ் மக்களும் முன்னேற்றம் அடைவதற்கான காரியங்களை எவர் ஆற்றவரோ, எவர் பரந்த அரசியல் நோக்கம் கொண்டு எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உழைப்பாரோ, எவர் தம் அறிவால் ஆற்றலினால், பேச்சுவன்மையால் எம சாதியர்க்குக் கீர்த்தி வாங்கிக் கொடுப்பாரோ, அவரையே—அவர் யாவரேயாயினும் எங்கு பிறந்தவரேயாயினும்—நம் பிரதிநிதிகளாகத் தெரிந்தனுப்புதல் வேண்டும் என்பதை ஈற்றில் வற்புறுத்த விரும்புகின்றோம்.

## வில்லூன்றியின் சீர்கேடு.

### இதனைக் கவனிப்பார் இல்லையா?

### செம்படவரின் வலை கழுவுதல்

(ஆ. சுப்பிரமணியம்)

இலங்கையில் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றாயும், மிகவும் புராதனம் வாய்ந்ததாயும் உள்ள வண்ணார்பண்ணை மேற்கில் இருக்கும் வில்லூன்றித் தீர்த்தக்கேணி இப்போது அடைந்திருக்கும்கேவல நிலைமை இங்குள்ள சைவ சமயிகள் யாவர்க்குமே இழுக்காகும். இத் தீர்த்தத்திற் கணித்தாகவுள்ள மடத்திலேயே சைவ சமயிகளாயுள்ளார் இன்னும் அபரக்கிரியை முதலியன நடத்திவருகின்றனர். இற்றைக்குச் சில வருஷங்களின் முன்னர், வண்ணைச் சிவன்கோவிற் சுவாமி எழுந்தருளி இங்கு தீர்த்தமாடுவது வழக்கமாயிருந்தது.

அந்த வழக்கம், எக்காரணத்தாலோ இப்போது சில காலமாக ஒழிக்கப்பட்டுவிட, இத் தீர்த்தம் மிகவும் இழிவான நிலையையடைந்துவிட்டது. இப்புனிதமான தீர்த்தத்தில், செம்படவராயுள்ளார், மீன் பிடித்தபின் வந்து தம் வலையை இத் தீர்த்தத்திற் கழுவுவதும், தாம ஸ்நானம் செய்வதும் கண்கூடு. இன்னும் புறமதத்தவரான இஸ்லாமானவர், கிறிஸ்தவர் முதலியோரும், இத் தீர்த்தக்கேணியைத் தம் எண்ணப்படி உபயோகித்து வருதல் எம் பலவீனத்தைக் காட்டாநிற்கின்றது.

இந்தத் தொன்மை வாய்ந்த தீர்த்தத்தின் கேவல நிலைமைக்குக் காரணம், இதன் சொந்தக்காரரான வண்ணைச் சிவன்கோவில் ஆதீன கர்த்தரது பாராமுகம் என்று கூறுதல் பிழையாகாது. இவர்கள் இனியேனும் இப்புண்ணிய தீர்த்தத்தை இந்நிலைமையில் விடுதல் அழகுமல்ல, முறையுமல்ல. தம்மால் இந்த ஹிந்துக்களுக்குரிய தீர்த்தத்தைக் கவனிக்கமுடியாவிட்டால், சைவாபிமானிகளைக் கொண்ட ஓர் சபையின் பொறுப்பில், அதன் நிர்வாகத்தை விடுதல் வேண்டும்.

இது விஷயத்தில் சைவாபிமானிகள் கிளர்ச்சிசெய்தல் ஆவசியகமாம்.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

ஷெ கல்லூரி தைப்பொங்கல் விடுதலைக்காலத்தின் பின்னர் வருகிற 20-1-36 அன்று ஆரம்பமாகும். இப் புதுவருஷத்துடன, பெண்பிள்ளைகளையும் சேர்த்துக் கல்வி பயிற்றுதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கெனத் திறமைவாய்ந்த ஆசிரியைகளும் நியமிக்கப்படுவர் என்று அறிகிறோம் இன்னும் “இன்ரர் ஆர்ட்ஸ்”. “இன்ரர் சயன்ஸ்” வகுப்புக்களும், திறமையும அநுபவமும் வாய்ந்த ஆசிரியர்களது பொறுப்பில் வைத்து நடத்தப்படும் என்று தெரிகிறது.

### 250 ரூபா அபராதம்.

சென்ற 7-1-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் நவாலியில் வசிக்கும் கந்தப்பர் வைத்தியலிங்கம் என்பவர் களவாகச் சாராயம் விற்றதாக மதுப்பரிசோதகரால் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி 250 ரூபா குற்றம் விதிக்கப்பட்டார், குற்றம் கட்டத் தவறினால் 6 கிழமை சிறை விதிக்கப்பட்டது.

### வண்ணானை அடித்ததாக.

சென்ற 7-1-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் கொக்குவிலில் வசிக்கும் வண்ணாரவகுப்பைச் சேர்ந்த மாரி பெரியதம்பி என்பவனைக் கோப்பாயில் வசிக்கும் சடையன் சின்னையன் என்பவனை அடித்துக்காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துத் தவணையிடப்பட்டது.

# பிரிட்டிஷ் பிரஜைகள்மீது குண்டு.

## எகிப்திய நிலையம் மீது குண்டு வீச்சு.

### இன்னோர் இற்றலிய விமான நாசம்

உயிரை இழக்கவும் எகிப்தியர் தயார்.

எகிப்திய இளவரசரின் வீர முழக்கம்.

ஸ்வீடன்தேச டக்ரர் மரணம்.

### மேன்மேலும் குண்டுமாரி.

மாகேலுக்குத் தென்பக்கமாக வுள்ள அம்பா அலாகி என்னும் இடத்தின்மீது இற்றலியர் ஆகாசவிமானங்களில் நின்று நச்சுக்காற்றுக் கக்குங் குண்டுமாரிகளை வீசினர். இதன் பயனாக 4 அபிசீனிய வீரர் மாண்டனர். மாகேலைக் கைப்பற்றுதற்காகத் திரண்டுவரும் அபிசீனியப்படைகளைச் சிதறடிப்பதே நச்சுக்காற்றுப் பிரயோகத்தின் நோக்கம்போலும். தானா வாவிக்குக் கிழக்கேயுள்ள டெப்ரா தபோர் என்னும் இடத்தின் மீதும் இற்றலியர் குண்டுமாரி வீசினர்.

### எகிப்தியச் செஞ்சிலுவைச் சங்கம்.

டசப்பூர்க் கணித்தாக எகிப்தியரால் வைத்து நடாத்தப்படும் செஞ்சிலுவை ஸ்தாபனத்தின்மீதும் இற்றலியர் வெடிகுண்டு வீசினர்: அத்துடன், அந்த ஸ்தாபனத்தை யந்திரத் துப்பாக்கிகளினுற் சுட்டனர் ஸ்தாபனத்தில் இருந்த உபகரணங்கள் சேதமடைந்தன. ஆனால், அதிர்ஷ்டவசமாக ஆட்களுக்குச் சேதம் ஏற்படவில்லை. இது எகிப்தில் இற்றலிக்கு மாறுகப் பெரும் மனக் கொதிப்பை உண்டாக்கியிருக்கிறது. எகிப்திய இளவரசர், இற்றலியின் இந்த அட்டூழியத்தைக் கண்டித்துச் சர்வதேச சங்கத்திற்கு அவசரத் தந்தி அனுப்பியிருக்கின்றார்.

### இன்னோர் விமானம் வீழ்த்தப்பட்டது.

அபிசீனியா வடமேற்குப் பக்கத்தில் குண்டுமாரி பொழிந்த ஆகாச விமானம் ஒன்றை அபிசீனிய வீரர் சுட்டுக் கீழே வீழ்த்தினர். அதில் இருந்த இரு சாரதிகளும் கொல்லப்பட்டனர் என்று இற்றலியர் ஒத்துக்கொள்கின்றனர்.

### உயிரை இழக்கத் தயார்.

எகிப்திய மன்னரின் புதல்வர் அபிசீனியச் சக்கரவர்த்திக்கு, எகிப்திய செஞ்சிலுவை நிலையத்தின்மீது இற்றலியர் நச்சுக்காற்று வீசியமை சம்பந்தமாகப் பின்வருமாறு தந்திச் செய்தி அனுப்பியிருக்கின்றார்:—

'இற்றலியின் அட்டூழியத்தைக் கண்டு நாம் அஞ்சமாட்டோம்; மனித சமூக சேவையில் எமது உயிரைத் திரணமாகமதித்துத் தியாகம் செய்ய நாம் சதா ஆயத்தமாயிருக்கிறோம்."

### விசாரணை புரிதல் வேண்டும்.

இப்போது நிகழும் யுத்தத்தில், யுத்ததர்மத்துக்கு விரோதமாக இற்றலி செய்யும் அட்டூழியங்களை விசாரித்து ஆராய்ந்து ஏற்றன செய்ய வேண்டுமென அபிசீனிய அரசினர் சர்வதேச சங்கத்திற்கு மனுச்செய்திருக்கின்றனர். ஆனால் இம்மறு

வைச் சங்கம் ஏற்றுநடவடிக்கைகளைக் கையாளுமோ என்பது சந்தேகம்.

### ஸ்வீடன் டக்ரர் இறந்தார்.

ஸ்வீடன் செஞ்சிலுவை ஆம்புலன்ஸ்மீது இற்றலியர் பொழிந்த குண்டுமாரியாற் காயமடைந்த டக்ரர் லண்ட்ஸ்ரோம் என்பவர் இறந்துவிட்டார். இது ஏறகெனவே மனக்கொதிப்படைந்துள்ள ஸ்வீடன் மக்களுக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

### குண்டுமாரி.

அபிசீனியா எல்லைப் புறத்தில் வசிக்கும் பிரிட்டிஷ் பிரஜைகள் மீது இற்றலிய ஆகாசவிமானங்கள் சென்ற சென்ற செவ்வாய்க்கிழமை குண்டுமாரி பொழிந்தன. இதனால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்று இன்னும் தெரியவில்லை.

### இன்னும் வீரர் வேண்டும்.

அபிசீனியாவில் யுத்தம் செய்வதற்கு இன்னும் பல யுத்தவீரர் வேண்டும் என்று இற்றலிய அரசினர் அவர்களைச் சேகரிக்க ஏற்பாடுகள் செய்கின்றனர்.

### பண்டிதர் நேருவுக்கு மன்னிப்பு.

பண்டித ஜவஹர்லால்நேரு கல்கத்தாவில் செய்த சொற்பொழிவுகள் சம்பந்தமாக வங்காள அரசினர் தமது சென்ற வருட அறிக்கையில் மிகவும் கண்டித்து எழுதியிருந்தனர். அப்படி எழுதியிருந்தமை முழுநிலும் அபத்தம் என்று பண்டிதர் அவர்கள் ஆட்சேபித்தனர். இப்போது வங்க அரசினர் அதன் பொருட்டு பண்டிதரிடம் மன்னிப்புக் கேட்டிருக்கின்றனர்.

### 150-ரூபா அபராதம்.

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சென்ற செவ்வாய்க்கிழமை 7-1-36ல் புத்தூரில் வசிக்கும் இளையதம்பி கந்தையா என்பவர் சாராயம் விற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார் எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் 150-ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

### இலங்கைப் புகைரதப் பகுதி.

இலங்கைப் புகைரதப்பகுதியினால் இலகாறும் அரசினர்க்கு நட்டம் ஏற்பட்டுவருகிறது இப் பகுதியை ஆதாயம் பயக்கக் கூடியதாய் எவ்வாறு அமைக்கலாம் என்பதைப் பற்றி விசாரணை செய்வதற்கு ஓர் சபையை நியமித்தல்பற்றி அரசினர் ஆலோசித்து வருகின்றனர்.

## கறுத்தப் பெண்களின் வீரம்.

—o—

பீரங்கிகளை நடத்தும் திறமை.

ஆடவர்க்குக் குறைவல்ல

இத்தாலியப் படைகளை எதிர்த்து தெய்த போர்முனையில் அபிஸீனியப் பெண்களும் ஆண்களுடன் சேர்ந்து யுத்தம் செய்கிறர்கள் என்று அடிஸ் அபாபாவிலுள்ள ஒரு உயர்ந்த ராணுவ அதிகாரி தெரிவிக்கிறர்.

வெப்பே ஷிபேலி பிரதேசத்தில் யுத்தம் நடந்தபோது இத்தாலியரை எதிர்த்து மிக தீரத்துடன் மூன்று அபிஸீனியப் பெண்கள் போர் புரிந்து கியாதி சம்பாதித்தனர். இவர்களில் ஒரு பெண் ஐந்து ஆண்களுக்கு தலைவராக யிருந்து இவர்களையெல்லாம் காப்பாற்றினதாகச் சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் யுத்தம் நாலுமணி நேரம் நடந்ததாம்.

சமீபத்தில் நடந்த சில சண்டைகளில் பெண்களும் கலந்துகொண்டதாக செய்தி வந்திருக்கிறது. அநேகம் யுத்த வீரர்களின் வீரத்தை மெச்சி அவர்களுக்கு சமீபத்தில் பரிசுகள் வழங்கப்பட்டபோது பெண்களின் பெயர் குறிப்பிடப்படாத தற்கு காரணம் என்னவென்றல் போர் முனையில் பெண்களைக் கொண்டுவந்து அபிஸீனியர்கள் நிறுத்துகிறர்கள் என்று இத்தாலியர்கள் புகார் செய்வார்கள் என்ற பயத்தினால்தான் என்று தெரிகிறது அபிஸீனிய ஸ்திரீகள் வெகு காலமாக தங்கள் புருஷர்களுடன் சேர்ந்து யுத்தம் செய்து வந்திருக்கிறர்கள் என்று அடிஸ் அபாபாவிலுள்ளவர்கள் சொல்லுகிறர்கள்.

வெப்பே ஷிபேலி என்னுமிடத்தில் போர் புரிந்த இரண்டு ஸ்திரீகள் இத்தாலியர்கள் கக்ஷியிலிருந்து போர் செய்த சுதேச சிப்பாய்களை எதிர்க்கையில் ஒரு பீரங்கி யந்திரத்தை நடத்தினதாகச் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி பீரங்கி வேலை செய்யும் சிப்பாயின் மனைவி. இவள் குண்டுகள் காலியாய்விட்டவுடன் வெகு ஜாக்கிரதையாயும், சாமர்த்தியமாயும் அந்த யந்திரத்தின் அச்சாணியைக் கழற்றிவிட்டு தனக்கு அபாயம் ஏற்படாமல் தரையில் ஊர்ந்து வந்து தப்பிக்கொண்டாள். இதற்குமுன் நடந்த நாலுமணி நேர யுத்தத்தில் இரண்டு ஸ்திரீகள் குண்டுகளுக்கு அகப்படாமல் நிலத்தில் ஊர்ந்துகொண்டு வெளியிலிருந்து பீரங்கிகள் கொண்டு வந்து கொடுத்து உதவினர்களாம்.

### உரும்பராயிற் சாராயம் வடிக்கும் கருவி.

சென்ற 7-1-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் உரும்பராயில் வசிக்கும் நாகலிங்கம் பெண் அழகமுத்தி என்பவள் சாராயம் வடிக்கும் கருவிகளை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டாள். எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் 200 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாள்.

—சென்ற 7-1-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் உரும்பராயில் வசிக்கும் அப்பாக்குட்டி நாகநாதி யென்பவர் சாராயம் வடிக்கும் கருவிகளும் வடித்த சாராயமும் வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் 250 ரூபா அபராதம் அல்லது (கட்டத் தவறினால்) 6 கிழமை மறியல் விதிக்கப்பெற்றார்.

### மானிப்பாயில் ஆதரவு.

ஸ்ரீ துரைசுவாமியின் பிரதிநிதித்துவம்.

மானிப்பாய்க் கிராமச் சங்கம் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்களையே வருகிற அரசாங்கசபைப் பொதுத்தேர்தலில் ஆதரிப்பது எனச் சர்வாங்கீகாரமாக ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

(Mis 248, 9-1 36)

## பிசாசின் திருவிளையாடல்.

தலையாளிவீட்டில் அதிசயச் சம்பவம் ஒருகைத்தோற்றம்: சட்டிபானை அழிவு.

மங்கைக்குச் சூலங் காட்டியது ஊரவர்களின் திகிலும் ஆச்சரியமும்.

[நமது நிருபர்.]

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தலையாளியில் உள்ள ஓர் வீட்டில் இப்போது சில காலங்களாக பிசாசின் திருவிளையாடல் தாங்கமுடியாததாய் இருக்கிறது.

இந்த வீட்டில் உள்ள சட்டி, பானை, பெட்டி, கடகம் என்பன யாவும் சில சமையங்களில் தூக்கி எறியப்படுகின்றன. தூக்கி யெறியும் ஆளின் உருவம் ஒருபோதும் தென்படுவது இல்லை.

### சோறு கறி அநர்த்தம்

சில சமையங்களில், அங்கே சமைக்கப்படும், சோறு கறியைத் தானும் அவ்வீட்டில் உள்ளார் உண்ண முடிகிறதில்லையாம். சமைத்து வைத்த சோறுகறிப் பாத்திரங்கள் அப்படியே தூக்கி வீட்டின் பின் பக்கத்தில் எறியப் படுகின்றன. ஒரு தினம், அங்குள்ளவர் கஞ்சி குடிப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றார். ஆனால், அவர்க்கு முன்னரேயே ஓர் உருவம், சட்டியில் இருந்த கஞ்சியைக் குடிப்பதாகத் தெரிந்ததாம். இதன்பின் அக்கஞ்சிச் சட்டி வீட்டின் பக்கத்திற் காணப்பட்டது.

### சூலம் காட்டிப் பயங்காட்டுதல்

இற்றைக்குச் சில நாட்களுக்கு முன், ஒரு நாள் இரவு, அவ்வீட்டில் உள்ள மங்கை யொருத்தி மலசல உபாதை தீர்ப்பதற்காக வெளியே சென்றபோது ஓர் கரிய உருவம், திடீரென அவள் முன் தோன்றி, அவள் மார்புக்கு நேரே சூலாயுதம் ஒன்றை நீட்டியது என்றும், இதன் பின் அப்பெண் சில தினம் நோய் வாய்ப்பட்டாள் என்றும் தெரிகிறது

### ஆட்களுக்கு அடி.

சில சமையங்களில் அவ்வீட்டில் வசிப்பவர்களுக்கு யாரோ மறைந்து நின்று அடிப்பது போலவும் தெரிகிறதாம்.

### ஒற்றைக் கை

வீட்டில் உள்ள பொருள்களை எறியும்போது ஓர் உருவத்தின் ஒற்றைக் கை கண்ணுக்குப்புலப்படுகின்றதாம். இக் கை கரிய நிறமுடையதாயிருக்கின்றது.

### கண்ணாரக்கண்டன

இது விஷயம் உண்மைதானோ என்று அறிவதற்காக நானும், சென்ற வெள்ளிக்கிழமை வேறும் சில நடனுடன் மேற்குறித்த வீட்டிற்குச் சென்றேன். அங்கே போனதும், வீட்டிற்குள் இருந்த பொருள்கள் பல வீசிவீசி யெறிபடக் கண்டேன். ஆனால் அவ்வீட்டிற்குள் ஒருவரும் இல்லை. இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், இப்படி எறியப்படும் சட்டி, பானை, கோப்பை, போத்ததல்கள் வீழ்ந்தாலும் உடைபடுவதில்லை என்பதே.

இவ்வீட்டில் இந்த அபூர்வ சம்பவம் நிகழ்வது பெரும் மாயமாயிருக்கின்றது. இப்போது இவர்கள் மந்திரவாதிகளின் உதவியை நாடியிருக்கிறார்கள்.

## சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி.

ஐயாயிரம் பேர்களுக்கு மேற்பட்ட ஜனத்தொகையையுடைய கிராமங்களிலும், நகரங்களிலுமுள்ள சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வியைப் போதிப்பதன் நிமித்தம் புதிய தொரு கல்வித்திட்டம் சமீபத்தில் புகுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நடத்திவைப்பதற்குத் தகுதியான மார்க்கங்களைப்பற்றிச் சிபார்சு செய்வதற்காகச் சென்னை அரசினர் மாகாணப் பொருளாதாரச் சபையின் உதவிச் சபை யொன்றை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் தவிரவும் மாகாண அரசினரின் வரவு செலவு விபரங்களைப் பொதுஜனங்களுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு மாதந்தோறும் ஒரு அறிக்கையை வெளியிட்டு வருவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அறிக்கை நடந்துகொண்டிருக்கும் வரவு செலவுத் திட்ட வருடத்தின் முதல் மாதத்திலிருந்து ஆரம்பமாகி அதற்கு முந்திய வருடத்தின் புள்ளி விபரங்களையும் தாங்கியிருக்கும் முதல் அறிக்கை சென்ற டிசம்பர் மாதம் 12ந் திகதி வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில் ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து அக்டோபர் 3-ம் தேதி வரையிலுள்ள புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### காலநிலை.

சென்ற சில நாட்களாக யாழ்ப்பாணத்திலே அதிக பனியும் வெயிலுமாக இருந்தன. இன்று மழைக் கோலங் காணப்படுகின்றது. ஊரிலே சுரநோய் அதிகமாகப் பரவி வருகிறது.

### றப்பர் விலை.

நேற்றையத் தினம் றப்பர் இருத்தல் (கிறேப்) 34 சதமாகவும், ஷீற் 34 சதமாகவும் விற்கப்பட்டன.

### கொப்பராவின் நிலைமை.

நேற்றைத்தினம் கொழும்பில் கொப்பரா கண்டி ஒன்று 45 ரூபா 50 சதமாக விற்கப்பட்டது.

### 75 ரூபா அபராதம்.

இருபாலையில் வசிக்கும் கதிரன் நீலன் என்பவன் சென்ற 7-1-36 செவ்வாய்க் கிழமை சட்டவிரோதமாகக் கள்ளு வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான் எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் 75 ரூபா அபராதம் விதிக்கப்பட்டான்.

### பிரபல வர்த்தகர் மரணம்.

பம்பாயிற் சிறந்த தேசியவாதியாயிருந்தவரும், வர்த்தகரும், கோடீஸ்வரருமான ஸ்ரீஜுத் F. E டின்ஷா என்பவர் சென்ற 5-ம் தேதி தேகவியோகமாயினர்.

# களவு செய்த காதலர்கள்.

## இளங்காதலரின் இரகசியச் சதி 2500 ரூபா மறைந்த விதம்.

## ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்தனர். தனித்தனி சிறைத் தண்டனை.

(நமது சொந்த நிருபர்)

தென் இலங்கையைச் சேர்ந்த பிரிலா என்னும் கிராமவாசியான என்டோரிஸ் அப்பு என்னும் சிங்கள வாலிபன் ஷை கிராமவாசியான ஸ்ரீமதி பஸ்ரியான் வீட்டில் இருந்த 2500 ரூபா பெறுமதியான ஆபரணங்களைக் களவாடினன் என்றும், சொபி என்னும் மங்கை அதற்கு உடந்தையா யிருந்தாள் என்றும், அவ்விருவர்மீதும் மாத்தறைப் பொலிஸ் கீநிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

இதன் விபரம் மிகவும் ருசிகரமானது. அது வருமாறு:—

ஷை சொபி என்னும் மங்கை ஸ்ரீமதி பஸ்தியானின் தத்தபுத்திரி. அவளுக்கு விவாகமாகும் வயது வந்துவிட்டது. இவள் பிரிலாவில் வசிக்கும் என்டோரிஸ் அப்பு மீது அளவற்ற காதல் கொண்டிருந்தாள். அவனை விவாகம்செய்வதற்கு அவனுடைய வறுமை தடையாகவிருந்தது. எனவே சொபி ஓர் உபாயம் சூழ்ந்தாள்.

ஸ்ரீமதி பஸ்தியான் செல்வமுடையவள். அவளிடம் ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான ஆபரணங்கள் உண்டு. அவற்றை அலுமாரிக்குள் இருக்கும் இரகசிய அறைக்குள்ளேயே பாதுகாத்து வைப்பாள். இது சொபிக்குத் தெரியும்.

சென்ற 29-12-35 இரவு, சொபி தனது காதலனைத் தான் வசிக்கும் வீட்டிற்கு இரகசியமாக அழைத்து தனது அறைக்குள் ஒளித்திருக்கும்படி செய்தாள்: பொழுது விடிந்ததும் ஸ்ரீமதி பஸ்தியான் தனது சகோதரியுடன் ஸ்நாகம் செய்யப்போய்விட்டாள். உடனே, சொபி அலுமாரிக்குள் இருந்த ஆபரணங்களையும் பணத்தையும் என்டோரிஸ் அப்புவிடம் கொடுத்து அவனை இரகசியமாக அனுப்பிவிட்டாள்.

தனது ஆபரணங்களைக் காணாத ஸ்ரீமதி பஸ்தியான் விஷயத்தைப் பொலிசர்க்கு அறிவித்தாள். அவர்கள் சொபியைப் பலவிதமாய்க் குறுக்கு விசாரணை செய்தபோது, அவளும் உண்மையைக் கூறிவிட்டாள். இதன்பின் பொலிசார், என்டோரிஸ் அப்புவைக் கண்டு சிறையாக்கியபோது அவனும் உண்மையைக் கூறினன். இதன் பின்னரே அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைமுடிவில், நீதிபதி எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு அவர்களுக்குத் தனித்தனி 1 வருஷக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

---

### மீண்டும் கட்டுப்பாடு.

ஜப்பானியர் பிரிட்டிஷ் தாசினரின் கட்டுப்பாட்டு விதிகளின்று தப்புவதற்காகத்தம் துணிகளைச் சட்டைகளாகவும் வேறு அணிகளாகவும் தைத்து அனுப்பி வருகின்றனர் இப்படி. இறக்குமதியாவதைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை யாசினை தீர்மானித்து இருந்தென சமீபகாலத்தில் ஓர் சட்டம் இயற்றவொன அறிகிரும்.

---

## ஜெர்மனியின் பேராசை

### மகாயுத்தத்தில் இழந்த நாடுகள்.

### விமானப்படை கட்டுப் பாட்டுக்கு ஹிட்லரின் பதில்.

பாரிஸ் சமாஸ திட்டம் முடிவடைந்தவுடன் டிஸம்பர் 13 ந் தேதியன்று பர்லினிலுள்ள பிரிட்டிஷ் ராஜதூதர் விமானப் படையைப் பற்றியும் தரைப் படையைக் குறைப்பது பற்றியும் ஹேர் ஹிட்லரிடம் கேட்டார். இதற்கு ஹேர் ஹிட்லர் அளித்த அதிசயமான பதிலை "நியூயார்க் டைம்ஸ்" நிருபர் வெளியிட்டுள்ளார். அதிலடங்கியுள்ள விஷயத்தின் சாரம் வருமாறு:—

சுமார் ஏழு மாதங்களுக்கு முன் ஆதரித்துக் கூறின இதே உடன்படிக்கையை தற்போது கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றினலொழிய தாம் பரிசீலனை செய்ய முடியாது என ஹிட்லர் தெரிவித்துவிட்டார். இந்நிபந்தனைகளாவன:—

(1) ஐரோப்பிய விமானப் படை பலத்தில் ஜேர்மனியே முதன்மையாய் விளங்கவேண்டும்.

(2) ஜெர்மனிக்குச் சொந்தமானதும் ஐரோப்பிய மகாயுத்தத்தில் அதனிடமிருந்து கைப்பற்றப் பட்டதுமான குடியேற்ற நாடுகளைத் திரும்பக் கொடுத்து விட வேண்டும்.

(3) ஜேர்மனிதான் குற்றவாளியென்ற ஷரத்தை வர்ஸேல்ஸ் உடன்படிக்கையிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

ஜேர்மனியின் பாதுகாப்புப் படைகள் படிப்படியாக உயர்ந்துகொண்டு வருவதை தீவிரமாகக் கவனித்து வருவதாகவும் இதைக்கண்டு பயமடைந்து வருவதாகவும் இவ்விஷயத்தில் ஜேர்மனியின் வாக்குறுதி வேண்டுமென்றும் ஹேர் ஹிட்லருக்குத் தெரிவிக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்க ராஜதூதருக்கு அறிவித்திருந்ததாக மேற்கண்ட நிருபர் கூறியிருக்கிறர்.

பிரிட்டிஷ் அரசினர் கேட்டுள்ள வாக்குறுதியையும், அதன் பயத்தைத் தீர்க்கும்படி பிரிட்டிஷ் ராஜதூதர் கூறியுள்ள ஆலோசனையையும் கண்டு ஹேர் ஹிட்லருக்கு கோபமூண்டுள்ளது.

---

### சமஸ்தானங்கள் வழிகாட்டுகின்றன.

பாடலிபுர சாணக்கிய சங்கத்தின் கூட்டமொன்று பரிஸ்டர் பி. கே. சென்னின் தலைமையில் நடைபெற்றது. இதில் லீலர் சபை அங்கத்தவரான சேர். ஸி. பி. ராமசாமி ஐயர் இந்திய சமஸ்தானங்களைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அவர் கூறியதாவது:—

இந்தியாவில் வெளிப்பார்வைக்கு வேற்றுமைகள் காணப்பட்டபோதிலும் இந்தியாது மனோபாவம் முக்கியாம்சங்களில் ஒன்றுபட்டிருக்கிறது. 10 வருஷங்களுக்கு முன் அருக்கிலிருந்த பிரச்சினைகளே தற்போது இந்தியாவிலிருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவைவிட இந்திய சமஸ்தானங்களே புதிய எண்ணங்களுக்கு துரிதமாக இணங்கி வருகிறன. இவ்வருஷ ஆரம்பத்தில் திருவாங்கூரும் கொச்சியும் கல்விவிஷயத்தில் இதர சமஸ்தானங்களைவிட முன்னணியிலிருக்கின்றன. இந்திய சமஸ்தானங்கள் சிறந்த ராஜ தந்திரிகளை உற்பத்தி செய்யுமிடமாக இருந்து வருகின்றன. ஸர் ஜாலர்ஜங்கும் மற்றவர்களும் இதற்கு உதாரணமாக இருக்கின்றனர். வரப்போகும் சீர்திருத்தங்களின் கீழ் இந்திய சமஸ்தானங்கள் சமஷ்டியில் முக்கிய உறுப்பாகக் கொள்ளப்படவேண்டும்.

---

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

எனக்குப் பேசி வந்த சம்பந்தங்களுட் பலவற்றை விலக்கி விட்டு, இரண்டு சம்பந்தத்தைப்பற்றி மாத்திரம் எனக்கு எழுதியிருந்தார்; அவைகளுள் ஒன்று எங்களுக்கு முன்பு தொடர்பில்லாத பகுதியில் உள்ளதாயினும் சாதி குலம் பரம்பு என்னுமிவைகளுள் எங்களைக்காட்டிலும் உயர்ந்தவர்களெனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் பகுதியைச் சேர்ந்த பெண்ணுருப்; அவர்கள் நல்லாயிருந்து கெட்டுப் போனவர்கள்; ஆனை படுத்தாலும் குதிரையிற் குறையாதென்ற பிரகாரம் அவர்கள் முட்டுப்பட்டாலும் வறுமையிற் செம்மையாக வாழ்ந்து வருபவர்கள்; ஆனல் தாங்கள் சாதியில் உயர்ந்தவர்கள் என்ற ஒரு செருக்கு அக்குடும்பத்தில் இயல்பாக உண்டு; என் தகப்பனர் அந்த விஷயமாக எனக்குக் கடிதம் எழுதியபோது "அவர்கள் எங்கள் குடும்பத்தில் வரத் தக்கவர்களல்லர்; ஆனமையினல் இதைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசனை செய்து மறுமொழி......................" என்று கடிதம் அனுப்பியிருந்தார். சீதன விஷயமாக எழுதிய விடத்தில் பணமாக இரண்டாயிரத்தைஞ்ஞூற்றுக்கு மேற் கொடுக்க மாட்டார்களென்றும், நிலம் புலம் பதினயிரம் பெறுமதியானவை தரலாமென்றும், நகைவகையும் ஆயிரத்தைஞ்ஞூறுக்குப் போடுவார்களென்றும், பெண் இலட்சணம் குற்றமில்லையென்றும் படிப்பளவில் தமிழில்லாமல் இங்கிலீசு கொஞ்சமும் படிக்கவில்லை, தையல்வேலை தெரியுமென்றும் குணமான பெண்ணெனக் கேள்விபெனவும் இப்படிப் பல விபரங்களை எழுதி, ஈற்றில் எனக்குச் சம்மதமானல் தமக்கும் எங்கள் தாயாருக்கும் சம்மதந்தான் என்று எழுதியிருந்தார்.

* * *

தகப்பனர் எழுதிய கடிதத்தைப் படித்தநாள் முதலாக நான் வேலை செய்யும் நேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் அதனையிட்டே சிந்தித்துக் கொண்டிருப்பேன்; நான் உத்தியோகம் பார்க்குமிடம் எனக்குப் புதிதாதலினல் இதனையிட்டுக் கலந்து யோசிப்பதற்கு எனக்கு உற்ற நண்பர்களுமில்லை. ஒருமுறை ஊருக்கு மீண்டுவந்து அந்த விவாகப் பேச்சைப்பற்றி ஆராயலாம் என்றல், எனக்கு வேலையேற்றுச் சிலகாலமானதால் எனக்கு முதலாளி விடுதலை தரமாட்டார் என்ற நியாயத்தினல் அப்படி வருதலும் முடியாமலிருந்தது ஆனதால் நான் அது எனக்கும் சம்மதந்தான் என்றும், என் தாயாரை அனுப்பிப் பெண் பார்ப்பித்து தாயாருக்குப் பிடிப்பாயிருந்தால் பெண்ணின் சாதகத்தை வாங்கிப் பொருத்தம் பார்க்கும்படியும் என் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். ஒரு வாரஞ் சென்றபின் தகப்பனர் தாம் அப்படிச் செய்ததாகவும் என் தாயாருக்குப் பெண்ணிற் பிடித்துக் கொண்டதென்றும், சாதகம் வாங்கிப் பொருத்தம் பார்த்த அளவில் நல்ல பொருத்தமென்றும் என் கடிதம் கண்டவுடன் எனக்குச் சம்மதமானல் அந்த விஷயத்திற் பிரவேசிக்கலாமென்றும் உடனே பதில் எழுதும்படியும் கடிதமூலமாகத் தெரிவித்திருந்தார். நானும் காலதாமதஞ் செய்யாது உங்களுக்குச் சம்மதமானல் எனக்குஞ் சம்மதந்தான் என்று எழுதியிருந்தேன்; பெண் இங்கிலீசு படிக்கவில்லை என்பதையிட்டுத்தான் எனக்குக் கொஞ்சங் கவலை

* * *

"எப்பொழுது விடுதலை கிடைக்கும் வீட்டிற்குப் போகலாம்" என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த என்னிடம் ஒருநாட்காலை எங்கள் முதலாளியாகிய துரைவந்து தாம் ஒரு வார காலத்திற்குக் கொழும்புக்குப் போய் அங்கு நிற்கவேண்டி வரும் என்றும், அது அடுத்த மாசத்தின் முன் பகுதியிலாகுமெனவும், தாம் இங்கில்லாத சமயத்தில் தம்முடைய கடமையில் ஒரு பகுதியை நான் மேலதிகமாகப் பார்க்கவேண்டி வருமென்றும் ஆனதால் எனக்கு இஷ்ட மிருந்தால் நான் அதற்கு இடையில் ஊருக்குப்போய் ஒரு வாரந் தங்கினின்று வருவதற்குத் தாம் விடுதலை தருவதாகவுஞ் சொன்னார்; அவர் சொன்னதைக் கேட்ட மாத்திரத்தே எனக்கு உண்டான ஆனந்தத்திற்கு ஒரு எல்லையில்லையெனலாம். நீங்கள் செய்யும் உபகாரத்திற்கு நான் என்றும் நன்றியுள்ளவனக இருப்பேன்; அதனை ஒருபோதும் மறக்க மாட்டேன்; என்ற கருத்துப்பட என் தலைவருக்கு நான் ஆங்கிலத்தில் அதிகூறினேன்; அவர் உடனே 30 ரூபாவுக்கு ஒரு "செக்" எழுதி என்னிடம் தந்துவிட்டு எப்பொழுது ஊருக்குப் போவதற்கு உத்தேசித்திருக்கின்றீர் என்று கேட்க, நான் நாளை மத்தியானப் புகைரதத்திற் புறப்பட்டுப் போகலாமென்றுபார்க்கின்றேன் என்றேன்; "மெத்தநல்ல காரியம், அப்படியே செய்யும்" என்று அவர் சொல்லி அநுமதியும் தந்தார்; நான் அடுத்த நாள் மத்தியானப் புகைரதமேறி மற்றைநாட்காலை ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

—வரும்.

---

# பெண்மக்களை இழிவு செய்தல்.

## நவநாகரிகப் போக்கில் நாரியர் மயக்கம் சைவமகா நாட்டில் தலைவி முழக்கம்.

## பெண்கள் கெடுவதற்குக் காரணம் யார்?

சென்ற வாரம் திருவண்ணுமலையில் சைவப் பெண்கள் மகாநாடு நடந்தது. ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மாள் தலைமை வகித்தார். அவர் தமது பிரசங்கத்தில் புராதன இந்திய நூல்கள், தற்கால இந்திய ஆடவர், கிரிக்கட், சினிமா, நாடகம், பட்டு வஸ்திரம், குழந்தைகளுக்குப் பூசும் பவுடர், தலைமயிருக்கு ரிப்பன், ஜாக்கெட், மேனுட்டார் ஒழுக்கம் இவைகளையெல்லாம் குறிப்பிட்டார்,

### ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மாள் கூறியதாவது:—

"படித்த ஆடவர்கள் பெண்கள் கூட்டங்கள் நடப்பதுபற்றிய விளம்பரங்கள் மனைவிமார் கைக்கு எட்டாதபடி செய்துவிடுகின்றனர். ஆகவே பெண்கள் அதிகமாக இத்தகைய கூட்டங்களுக்கு வர முடியவில்லை ஆடவர்களில் பலர் இங்கே இல்லாவிட்டால், பெண்கள் தங்களுக்குள்ள குறைகளை நன்ருக எடுத்துக்கூறக் கூடுமென்று நான் நம்புகின்றேன். பெண்கள் முன்னேற்றத்தில் ஆடவர்களுக்கு உண்மையான சிரத்தை இருக்குமாஞல் பெண்களின் அறிவு விருத்திக்குப் போதிய அவகாசம் அளிக்கவேண்டும். புராதன இந்திய ஆசிரியர்கள் பெண்களை இழிவுபடுத்திக் கூறியுள்ளனர்: ஆனல் மகாத்மா காந்தி ஆடவர்கள் ஒழுங்காக நடந்தால் உலகில் ஒரு சிறுமியும் கெட்டுப்போக மாட்டாளென்பதை ஒத்துக்கொண்டிருக்கிறர். கவிதா சக்தியுள்ள ஆடவர்கள் சிலர் பெண்கள் மீது வசை புராணம் பாடியிருக்கின்றனர். பெண்களுக்கும் கவிதா சக்தியுண்டென்பதையும், அவர்களாலும் ஆடவர்களை இழிவுபடுத்திக்கூற இயலுமென்பதையும் நான் ஆடவர்களுக்குக்கூற விரும்புகின்றேன்.

ஆடவர்களில் மேதாவிகளென்ற பட்டம் பெற்றவர்கள் பெண்களுக்கு மட்டும் கற்பு என்பதை விதித்து, ஆடவர்களுக்கு சர்வ சுதந்தரமளித்துள்ளனர்.

பெண்கள் கிரிக்கட் முதலிய பந்தயங்கள் மீது ஆசைவைத்து வருகின்றனர். அத்தகைய நடவடிக்கைகளால் இந்தியமாதர் ஆசாரமே சீர் குலைந்துவிடும். நமது பெண்கள் அயல்காட்டு "பவுடரை" தங்களது குழந்தை முகத்திற்கு பூசி வருகின்றனர்.

இந்த "பவுடரால்" வேர்வைகட்டியை நிவர்த்தி செய்யக்கூடுமென்று சாக்கு கூறுகின்றனர். இத்தகைய பவுடர் இல்லாத புராதன காலத்தில் பெண்கள் ஆரோக்கியத்துடனிருக்கவில்லையா என்று நான் கேட்கின்றேன். தற்போது பெண்கள் தங்களது ஜாக்கெட்டுகளின் நீளத்தைக் குறைத்துக்கொண்டே போகின்றனர்; இது சரியல்ல. கையின் மேல்புறம் திறந்திருப்பது பெண்களின் நாணத்திற்கு ஒத்ததல்ல படித்த பெண்கள் தங்களது ஜாக்கெட்டுகளின் நீளத்தைக் குறைக்கின்றனர், ஆனல் அவர்களது கணவன்மார்கள் அதை விரும்புவதே இல்லை. இக்காலத்தில் விவாகமாவது கன்னுக்கடை ஏலம்போல் நடக்கிறது.

தங்களது மனைவிமார்களை பட்டால் அலங்கரித்து சினிமாக்கள், நாடகங்கள் இவைகளுக்குக்கொண்டு போவதால் மாதர் முன்னேற்றத்திற்குச் சாதகம் ஏற்படுமென்று சில ஆடவர்கள் நினைக்கின்றனர். அது தவறான கொள்கையாகும். ஏராளமாக பட்டு உற்பத்தி செய்வது பாவச் செயலாகும். அதனல் பட்டுப் பூச்சிகள பல்லாயிரக் கணக்கில் சாகவேண்டியிருக்கின்றன. சினிமாக்கள் நாடகங்கள் இவைகளுக்குச் செல்வதில்லை, பென்று பிரமாணம் செய்யும்படி இங்குள்ள சபையினரை நான் வேண்டிக்கொள்கிறேன்"

---

### "வேறு நான் எங்கே போவது".

இப்ராஹிம் என்ற சப்பாக் கடைக்காரர் ஒரு தேவாலயத்தில் நின்றதற்குப் போதிய காரணம் கூறத் தவறியதாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு பலப்பிட்டி போலீஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி எதிரியை குற்றவாளி எனக்கண்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார். அப்போது "நான் வேறு எங்கே ஐயா போவது?" என்றெதிரி கூறினன். சிறைசென்று திரும்பியதும் அம்மாதிரி குற்றத்தை இனியும் செய்யாதிருக்கும்படி நீதிபதி எதிரியை எச்சரித்தார்.

---

### ஜுபிலி முத்திரைகள் விற்பனை.

கடந்த மேமாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய இலங்கையில் ரூபாய் 7,000,000-க்கு மேல் பெறுமதியான ஜுபிலி முத்திரைகள் விற்பனையாகியிருக்கின்றன. மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் ஜுபிலியை முன்னிட்டு கடந்தவருடத்தில் புதிதாக வெளியிடப்பட்டதபால் முத்திரைகள் டிசம்பர் மாதம் 31வுடன் தவிர்த்துக்கொள்ளப்பட்டன. அவைகளுக்குப் பதிலாக இப்போது அழகான படங்களுடன் கூடிய தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கடந்த வருடத்தில் கீழ்க்கண்ட பிரகாரம் ஜுபிலி முத்திரைகள் விற்பனையாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

| | |
|---|---|
| 6 சத முத்திரை. | 10,900,000 |
| 9 சத ,, | 840,000 |
| 20 சத ,, | 424,000 |
| 50 சத ,, | 690,000 |
| மொத்தம் | 12,854,000 |

# மதம்மாற்றம் எளியவேலை.

## ஆசைமூட்டிக் காசுகாட்டும் துர்ச்செயல்! சர்வமதசமரசமகாநாட்டின் கண்டனம்.

### மிஷனரிமார்செய்யவேண்டிய உண்மைத் தொண்டு.

அகில—உலகச் சர்வமத சமரச மகாநாட்டின் இந்தியக் கிளைஸ்தாபனத்து 5-வது கூட்டம் வர்தாநகரிற் சென்றவாரம் கூடியது. இந்தியாவின் பலபாகங்களிலும் உள்ள பல்வேறு மதஸ்தர்கள் ஷெ மகாகூட்டத்திற்கு விஜயம் செய்தநடவடிக்கைகளிற் பங்குபற்றினர். அப்போது சில மதகுரவர் செய்யும் மதம் மாற்றும் முயற்சி கண்டிக்கப்பட்டதையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

"பொது மக்களின் சேமலாபம் கருதி, மகோன்னதமான லக்ஷயத்தைக்கொண்டு மிஷனரிமார் பாமரசனங்களிடையேதொண்டுபுரியலாம்; சமூகக்கொடுமைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கலாம்.

"ஆனால் தமது மதத்தில் உள்ளவர்களின் தொகையைப் பெருக்குவதற்காக அவர்களுக்குப் பணவாசைமூட்டி பின் காசுகாட்டியோ வேறெவ்வித சௌகரியங்கள் அளித்தோ அவர்களை மதம் மாற்றும் முயற்சியை இம் மகாகூட்டம் பலமாகக் கண்டிக்கிறது."

என்னும் தீர்மானம் ஷெ மகாகூட்டத்திற் சர்வாங்கீகாரமாக நிறைவேற்றப்பட்டது.

---

## ஸ்ரீ துரைசுவாமிக்கு மீண்டும் ஆதரவு.

சென்ற 31-12-35 இல் அராலி மகா ஐக்கியசபையின் பொதுக் கூட்டம் ஒன்று கூடி ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்களையே போட்டியின்றி அரசாங்க சபைக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. போட்டி ஏற்பட்டால், அதற்கான செலவுகளைச் சரிப்படுத்துதற்கு ஊரவர்களிடம் இருந்து பணம் சேகரிக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப் பட்டது. இதறகென ஓர் நிர்வாக சபையும் அக்கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்டது.

பருத்தியடைப்பில்.

பருத்தியடைப்புவாசகர்களின் கூட்டம் ஒன்று சென்ற புதன்கிழமை யிரவு கூடி வருகிற தொகுத் தேர்தலில் ஸ்ரீ துரைசுவாமியை ஆதரிக்க வேண்டுமெனத் தீர்மானித்தது.

(Mis 246 9-1-36)

---


## வந்து விட்டது! வந்துவிட்டது!

பெயர் பெற்ற பவுண்மார்க்ஓடுகள் யாழ்ப்பாணம் ரேகில வந்திருப்பதால் இன்று (6-1-36) தொடக்கம் ஏறக்குறைய ஒரு வாரத்திற்குச் சகாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீரகத்திப்பிள்ளை & சன்ஸ்.
யாழ்ப்பாணம்.


---


## வெளிவந்து விட்டது.

### தஞ்சைவாணன் கோவை சொக்கப்ப நாவலருரை.

வித்துவான் ந. சுப்பையபிள்ளை பரிசோதித்துத் திருத்திய திருத்தங்களுடனும், எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புரையுடனும் கூடியது.

| | |
|---|---|
| கலிக்கோ கட்டு | 3.50 |
| சாதா | 3-00 |

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.


---

## என்றுமுள தென்றமிழ்.

1ம் பக்கத் தொடர்ச்சி.

நமது தமிழ்ச் சங்கம் செய்துவரும் முயற்சி மிகவும் பாராட்டுதற்கு உரியதாகும். வேற்றுக் கலைகளைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு இந்தச் சங்கம் செய்து வரும் தொண்டே தமிழ்த் தாய்க்குக் காலத்திறைற் செய்யும் பெருந் தொண்டாகும். இத்தகைய நூல்களை ஆக்குவதற்கு இன்றியமையாத வேண்டும் சொற்கள் கம் தமிழிலேயே ஆக்கிக் கொள்ளல் வேண்டும். மிக இன்றியமையாத விடத்து வேற்றுச் சொற்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவைகளைத் தமிழ் இலக்கண வம்பிற்கு உட்பட்டு ஆக்கல் வேண்டும். இதனை நம் தமிழ்ச் சங்கம் உணர்ந்து திறம்படச் செய்து வருவது பாராட்டத் தக்கதாகும். இங்ஙனம் ஆக்கப் பெறும் புதுக் கலைகளால் மொழி விரிந்து, தொழிற்றுறைகள் விரிந்து நாட்டின் வளம் விரிதலன்றி நம்நாடு ஏனையநாடுகளின் பெருமைகளை எய்தல் இயலாது. அதற்குரிய முயற்சிகளைச் செய்யாமல் நம் நாடு நகரங்களைப் புராண முறைப்படி பாராட்டிக்கொண்டிருப்பதிலும்; பெரும் பயன் எய்திவிடாது சுருங்கக் கூறின் நமது நாட்டுக் கல்விப் பயிற்சியை ஆங்கிலம் ஒழிந்த கலைப்பயிற்சிகளையெல்லாம் தாய்மொழிவழியாக நடைபெறச் செய்யும் தாய் மொழியில் புலமைப் பயிற்சியோடு பனைட்டுக் கலைப்பயிற்சியும், தொழிற்கல்வியும் சேர்த்துப் பயில்விக்கச் செய்யவும் காம முற்பட வேண்டும்.

---

## தீண்டாதாரும் ஆலயப் பிரவேசமும்

இந்தியாவில் ஐக்கிய மாகாணத்தில், உயர் ஜாதி ஹிந்துக்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை இருப்பது போலத் தமக்கும் அவ்வுரிமை வேண்டுமென்று தீண்டாதார் கிளர்ச்சி செய்து வருகின்றனர். அவர்கள் ஆலயங்களுக்கு முன் நின்று சத்தியாக்கிரகம் செய்யத் தீர்மானித்திருக்கின்றனர். இதற்கு 120 தொண்டர்கள் வேண்டுமென இரு பிரபல தீண்டாசச்சாதித் தலைவர்கள் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

---

## 2100 யானைகள் கொல்லப் பட்டன.

ஆபிரிக்காவைச் சேர்ந்த உகண்டா என்னும் பிரதேசத்தில் சென்ற ஆண்டு 2100 யானைகள் வேட்டைக்காரரால் கொல்லப்பட்டன. இப்போது அப்பிரதேசத்தில் ஏறக்குறைய 4500 யானைகளே உள வென்று கணிக்கப்பட்டிருக்கிறது.

---

## லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சை.

வருகிற 14-ம் தேதி தொடக்கம் 17-ம் தேதி வரை இலங்கையில் நிகழவிருக்கும் லண்டன் மற்றிகுலேஷன் பரீட்சைக்கு 1198 மாணவர் மனுப்பத்திரங்கள் அனுப்பியிருக்கின்றனர். இப்பரீட்சைக்கு 30 மாணவிகளே மனுக்கள் அனுப்பியிருக்கின்றனர். எல்லாமாக இலங்கையில் 8 ஸ்தானங்களில் இப்பரீட்சை நிகழும்.

---

## முக்கிய அறிவித்தல்.

அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் சம்பந்தமான கூட்ட விவரங்கள், அறிவித்தல்கள் யாவும் இப் பத்திரிகையில் விளம்பரமாகவே பிரசுரிக்கப்படும். இவ் விளம்பரங்களுக்கான விகிதம் வருமாறு:


| | | |
|---|---|---|
| ஒருமுறைக்கு ஒருபந்தி (கலம்) | ரு. | 10-00. |
| ,, அரைப்பந்தி | ,, | 5-50. |
| ,, கால் பந்தி | ,, | 3-00. |
| ,, 1 அங்குலம். | | -75. |

விளம்பரக் கிரயம் முற்பணமாகவே இறுக்கப்படல்வேண்டும். இவ் விளம்பரங்கள் மானேஜருக்கே அனுப்பப் படல் வேண்டும்.

மானேஜர்
இந்துசாதனம்.

---


## துடைமார்க் ஓடுகள்.



உலகில் உள்ள ஓடுகளில் மிகப் பெரியனவும் மலிந்தனவும் இவையே.

அரசினர்க்குஇவ்வோடுகளைஉதவுவோர்

**J. செருபிம் பிறதர்ஸ்**
தனி ஏசண்டர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(H 114 1-8.35 to 31-1-36)


---


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பேருக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்திலுலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பேருக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு,சாலா முஸ்லி, சப்பேமுத்ஸலிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அபகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் கில ருத்தல் ஒன்றுக்கு ரூபா 6. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ஐ. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனுல் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு
இலோன்.

(Y55 1-1-34 to 31-12-35)


---

# பத்திரிகை முழக்கம்.

## இந்தியக் காங்கிரசின் செல்வாக்கு.

பாரதநாட்டின் உண்மைப் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாய காங்கிரசின் செல்வாக்கு ஒழிந்துவிட்டது. அதை ஆதரிப்பார் எவருமில்லை என்று பிரிட்டிஷாரும், அவரபடும் பல்லக்கேற்ற தாளம் போடும் சுயநலப் புலிகளும் பாடும பல்லவி ஆதாரமற்றது என்பதை இப்போது பாரதநாடெங்கும் மிக்க குதூகலத்துடன் கொண்டாடப்பட்டுவரும் காங்கிரஸ் பொன்விழா துலாம்பரமாகக் காட்டுவதாகும் என்று கல்கத்தா "அமிர்தபஸார்ப் பத்திரிகை" கூறுகிறது. இன்னும் காங்கிரசை அடக்கத் தமது அரசினர் செய்துவரும் பிரயத்தனங்கள் யாவும் அவமே முடியும்; அக்ச உயரியஸ்தாபனம் இந்திய அரசினர் செயலுக்கு முறை அட்டூழியத்தினைச் சுட்டுச்சுடரும் செம்பொன் என மிளிரும் என்பது அத் தேசியப்பத்திரிகையின் சித்தாந்தம். மேலும் அப் பத்திரிகை பின்வருமாறு புகலுகின்றது:-

காங்கிரசின் வெளித் தோற்றத்தை அடக்கலாம் ஆனல் பாரதமக்களின் சுதந்திரவிடாயை அடக்குத முடியும் காரியமா? ஒருபோதும் முடியாது: இந்த உண்மையைப் பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் உணரவில்லை. உணர்ந்திருப்பாரானல் இப்போது இங்கிலாந்து, இந்தியா என்னும் இருநாடுகளிற்குமிடையேயுள்ள தேசபான்மையின் நிலை வேறுபிருந்திருக்கும். இப்போது, இந்தியாவானது இங்கிலாந்துடன் எவ்வித தொடர்பும் வைத்திருக்காமல் பூரண சுயராச்சியம் பெற்ற நாடாய் விளங்கவேண்டும் என்னும் கொள்கையாளர் இந்தியாவில் அதிகரித்து வருகின்றனர் இதற்கு பிரிட்டிஷாரே ஜவாப்தாரியாவர். இப்போதுதானும் பிரிட்டிஷார் தம் யதேச்சாதிகார இச்சையைத் தவிர்த்துப் பாரதமக்களின் ஒத்துழைப்பை மனப்பூர்வமாக நாடுவரேயானல், பின்னுக்கு நன்மை பெறுவார்கள்"

---

## நம் பிரதிநிதிகளின் கடமை.

எமது வடமாகாணம் பொருளாதார விஷயத்தில் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது வேலையில்லாத் திண்டாட்டம் எமவாலிபரை மிகவும் பீடித்திருக்கிறது. இந்தக் கேவலநிலைமையைப் போக்குதற்கான மார்க்கங்கள், படித்த வாலிபர்க்கு விவசாயத்தில் ஆர்வமூட்டுதல், வடபகுதித் துறைமுகங்களை திறத்தல்; அரசினர் மேற்பார்வையில் எமது சுருட்டுத் தொழிலைப் புனருத்தாரணம் செய்தல் என்பனவே என்று "ஆங்கில இந்துசாதனம்" பகர்கின்றது. இக் கைங்கரியங்களை பூர்த்தியாக்கும் விஷயத்தில், அடுத்த அரசாங்கசபைப் பிரதிநிதிகளாய்ச் செல்லும் ஐவர்மீதும் அபாரமான பொறுப்பு உளது. இவர்கள் ஐவரும் பரஸ்பரம் ஒற்றுமை பூணவேண்டும் தம் சமூகத்தைப் பாதிக்கும் எவ்விஷயத்திலும் இவர்கள் ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்க கூடாது. திடசித்தத்துடன் கடமை யாற்றினால்தான், நாம் எமது லட்சியத்தைப் பூர்த்தியாக்க முடியும். இன்னும், சிங்களத்தலைவர்கள் இப்போது எம்மீது அநுதாப மற்றவராய்க் காணப்படுகின்ற படியால், எமது தமிழ்ப் பிரதிநிதிகளுக்குள்ளே ஒற்றுமை யிருக்கவேண்டிய அவசியம் அதிகமாகின்றது என்று அப்பத்திரிகை அபிப்பிராயப்படுகின்றது.

---

## அரசாங்கசபைத் தேர்தல்.

அடுத்து நிகழவிருக்கும் அரசாங்க சபைத் தேர்தலில் அபேட்சகராய் நிற்பவர், தாம் வெற்றிபெறுதற்காக முறை கேடான வழிவகைகளைக் கையாளவொண்ணுது என்று உதயதாரகை பகர்கிறது. பீப்பாய்க்கணக்கிற் சாராயமும் கலன்கணக்கிற் கள்ளும் வாக்காளர்க்கு உதவி அதன் பயனுக ஒருவர் வெற்றிபெறுவாரானல் அதனைவிட அவருக்கு அவமானம் தரும் செயல் பிறிதொன்றுமில்லை எனலாம். அரசாங்கசபைத் தேர்தற்காலத்தை, வாக்குரிமையைக் கொண்ட பாமரஜனங்களுக்கு நாது அரசியல் நிலையை எடுத்து விளக்கி, அவர்களை ஜனநாயக ஆட்சிமுறையிற் பயிற்றுதற்காக அறிஞர் உபயோகிக்க வேண்டும். நேரான முறையில் நம் பிரதிநிதிகள் வெற்றி கொண்டு, அரசாங்க சபைக்குட் சென்று, நாட்டின் முன்னேற்றம் கருதிய மற்றவர்களுடனும் ஒத்துழைத்தல் வேண்டும் என "உதயதாரகை" கூறித் தனது சிறிய கட்டுரையை முடிக்கின்றது.

---

## இற்றலியின் பேடித்தனம்.

இற்றலி, அபிசீனிய யுத்த விஷயத்தில் நடந்து கொள்ளும் பேடித்தனத்தைச் சென்னை "சுதேசமித்திரன்" கண்டித்து எழுதுகின்றது. இற்றலியர் முந்தி ஓர் முறை செஞ்சிலுவை ஆஸ்பத்திரியின் மீது வெடிகுண்டுகளை எறிந்து சேதத்தை விளைத்தது. "இதை அக்காலத்திலேயே எதியோப்பிய சக்கரவர்த்தியும் செஞ்சிலுவைச் சங்கத்தாரும் ஆட்சேபித்து சர்வதேசசங்கத்திற்கு முறையிட்டனர். சர்வதேச சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாததால் இத்தாலிக்கு இருந்த கொஞ்சம் குளிரும் போய்விட்டது. அது மறுமுறையும் இந்தக் கோர காரியத்தைச் செய்ததாகவும், இதனால் மிகுந்த சேதமேற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. சர்வதேச சங்க உடன் படிக்கையை லக்ஷியம் செய்யாமல் அபிசீனியா மீது படையெடுத்திருக்கையில் யுத்ததர்மங்களை ஏன் பின்பற்ற வேண்டுமென்று இத்தாலி ஒரு வேளை நினைத்திருக்கலாம் அல்லது வெளிநாடுகளிலிருந்து எதியோப்பியாவுக்கு வைத்திய உதவி கிடைக்காமற் செய்து விடுவதற்கு இந்த நடவடிக்கை உபயோகமாக இருக்குமென்று அது நினைத்திருக்கலாம். முதது காட்டி ஓடுகையில் மாதா கோயில்களை எரித்தும் சாமான்ய ஜனங்களைச் சித்திரவதை செய்தும் வரும் இத்தாலி தர்ம நியாயங்களுக்குக் கட்டுப்படுமென்று சிறிதும் எதிர் பார்ப்பதற்கில்லை. இந்த நிலைமையில் சர்வதேச சங்கமானது தனது பௌருஷத்தைக் காட்டிக் கொள்ளாவிடில் இத்தகைய அநீதி அதிகரித்துவிடும். சர்வதேச சங்கம் என்னசெய்யப் போகின்றது? வெறுமே கூடிக் கலைந்து கொண்டிருக்கப்போகிறதா? அல்லது இத்தாலி பணிந்துவரும்படி செய்யக்கூடிய தீவிர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளப் போகிறதா? அதன் பதிலைப் பொறுத்தாகவே சர்வதேச சங்கத்தின் எதிர்கால வாழ்வு இருக்கும்" என்று சுதேசமித்திரன் கூறுகிறது.

---


# தேவை.

லண்டன் மற்றிக்குலேஷன் அல்லது அதற்குச் சமானமான பரீட்சையில் தமிழுடன் சித்தியெய்திய யாழ்ப்பாணத் தமிழ் ஹிந்து வாலிபர், சைவ பரிபாலன சபையின் அச்சியந்திரசாலைப் பகுதிக்குப் பிரதம "வோர்க்" காயும் தொழிலாளர் தலைவராகவும் கடமை பார்ப்பதற்குத் தேவை.

தெரிவுசெய்யப்படுபவர், தம் கடமையைக் கையேற்குமுன், சென்னைபட்டினத்தில் உள்ள பிரபல அச்சுநிலையம் ஒன்றில் 6 மாதத்திற்கேனும் தம்முடைய செலவிற் பயிற்சிபெற்றுத் தராதரப் பத்திரமும் பெறுதல் வேண்டும். இதன் பின்னரே அவர் நியமிக்கப்படுவர்.

ஆரம்ப மாதவேதனம் 50/-ரூபா: வருடந்தோறும் உயர்ச்சிபெறும்.

விரும்புவோர், 1936-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதிக்குமுன் பின்வருபவருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

C. A. கந்தப்பசேகரம்,
கௌரவ காரியதரிசி,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

# கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்குபபடி. தாப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விளுவியறிந்துகொள்ளலாம்.

**V. C. ஓமன் B. A.**
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

---

"இரதி மன்மத"

# சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ் வேறு.

**N. B.** முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—
மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்றோட்,
கோல்லம், **Quilon S. India**

H 208. 1-12-35 to 31-5 36

---

திறம் தேக்கமரம் — பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சீயம் தேக்கமரங்கள் ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள் ரூபா 2-75சதந் தொடக்கம்

## இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

சி வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
(Y 57. 1.5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

---

தலைவலி யுற்றபோது

# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

## தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்
தலைவலி யுடனே மாறிவிடும்
அதுவுமன்றி இது இந்தியாவில்
இந்தியர்களாலேயே செய்யப்படுவது.
இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.


## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 7ம் நெம்பர் சின்னக்கடைத்தெரு பெ. த. செல்வவிநாயகம், எம். இராசேந்திரம் என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1934ம் ஆ. 8ம்மீ

| இல. | தி. | ரூ. ச. | நகைவிபரம் |
|---|---|---|---|
| A 548 | 8 | 40 04 | நடமன் காப்பு சோடி 1 ஈ ஓ |
| 9ம்மீ | | | |
| 660 | 7 | 13 | கல் வைத்தோர் 1 |
| 668 | 9 | 11 50 | ஒறுதோடுசோடி 1, கல்லிவைரக் குச்சு சோடி 1 சு 1 இ |
| 670 | 12 | 10 | அரைத் தக்கப் பவுண் 1 |
| 722 | 28 | 10 | கல்வைத்த மோதிரம் 1 |
| 10ம்மீ | | | |
| 742 | 4 | 35 25 | பஞ்சாயுத முடன் கழுத்துச்சங்கிலி 1, இமிற் வெள்ளைக் கல்தோடுசோடி 1, சிறு திருகுப்பூ 1 |
| 752 | 8 | 10 | வெள்ளி வைத்த திருகுப்பூ 1 |
| 763 | 12 | 15 | இமிறேசன் பதக்கம் 1 |
| 789 | 20 | 13 | இமிற்றேசன் பதக்கம் 1 |
| 800 | 22 | 145 | முடிச்சக்குத்தி தொங்கு தாலிக்கொடி 1 குடம் 4 |
| 812 | 24 | 15 | இமிற்றேசன் பதக்கம் 1 |
| 829 | 28 | 7 50 | இருதயம் 1 |
| 11ம்மீ | | | |
| 867 | 4 | 20 | பின்கோர்க்கிடைக்குமுடன் கரிசமணிக்கோர்வை 1க்கு மணி 21 |
| 899 | 8 | 6 | கொப்புச் சிமிக்கி கூட்டம் 1 |
| 927 | 14 | 125 | முடிச்சுக் குத்தி தாலிக்கொடி 1க்கு குடம் 2 |
| 930 | 14 | 15 | இமிற்றேசன் பதக்கம் 1 |
| 962 | 21 | 10 | இமிற்றேசன்வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 970 | 25 | 55 | டிம்மியுடன் சங்கிலி யட்டியல் 1 |
| 972 | 25 | 11 | முத்து புறோச் 1, முத்துக் கட்டிய குருக்கோல்கொடி 1 |
| 973 | 25 | 59 | முத்துக் காப்பு சோடி 1, முத்து புறோச்சு 1, முத்து சவுத்தோர் 1 |
| 976 | 25 | 60 | பின்கோர்க்கியுடைக் குபட்டிமாலை 1 |
| 12ம்மீ | | | |
| 1002 | 2 | 10 | சிவத்தக்கல் மோதிரம் 1 |
| 1010 | 4 | 8 | சிவத்தக்கல் கடுக்கன் சோடி 1 |
| 1016 | 5 | 13 | அட்சரக்கூடு 1 |
| 1039 | 9 | 50 | புறோச்சு 1, கல்லவுத்தோர் 1 இமிற்றேசன் கல்தோடுசோடி 1 |
| 1044 | 10 | 10 | சம்பி சரையுடன் சாதாகல் தோடு சோடி 1 |
| 1057 | 13 | 10 | பெண்டன் 1 |
| 1088 | 19 | 6 | கொண்டைக் கூர் 1 |
| 1103 | 22 | 9 04 | சால்வெள்ளி சூவலைக் கடுக்கன் சோடி 1 |
| 1120 | 25 | 8 | செவ்வந்தித் திருகுப்பூ 1 |
| 1127 | 27 | 25 | முசப்புடன் கொலிசுக்காப்பு 1 |
| 1129 | 27 | 19 54 | டிம்மியுடன் பதக்கம் 1 |
| 1138 | 28 | 11 04 | திருகுப்பூ 1 |
| 1141 | 29 | 18 | பின்கோர்க்கி 1 |

விற்பனவு- 1936ம் ஆண்டு யுவ வருஷம் தைமாசம் 8ம் திகதிக்குச்சரியான (21.1-36) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் ஏடுபட்ட நகை பிறகேகலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதஉடையார்,
வெர்தின்மேன்தர்.

திரிகோணமலை,
1-1-36-
Mis. 244. 6&9-1-36.

---


## செவ்வந்திப் பூக்கள்.

மஞ்சள் நிற வெள்ளை நிற அன்றன்றலர்த்த செவ்வந்திப்பூக்கள் போதிய அளவு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை சகாயம்.

கா. சுந்தரஐயர்.
கொக்குவில் கிழக்கு
(Mis. 23[illegible]. 26-9-35 to 9-1-36.) வி

# மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பிமுத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சுஒன்றுக்கு சதம் —50
றுத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள்தங்கம், புனுகு, பச்சைக்கற்பூரம், ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சக்கணவிக்லை சாம்பிறாணி பதக்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச் சாக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருச்சி டக்டர் A மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெறவிரும்புவோர், நான்கிலொருபாகத்தை முன்பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்,

**ஆ. இராசையா,**

சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.
Q. 240 1-1-36 to 31-3-36.

---

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திருபா
5ம் ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுபேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம் பாத்தியத்திலும், நடைச்சணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1 11-35 to 31-10-36.) வி.

---

## நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[ வரையுளது ]
மூலதனம் ரூபா 30,000.
100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை
கரைச்சி நீர்ப்பாச்சற்பகுதிகளில் நடந்துவருகிறது.
பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம்.
பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு ஐந்து கழிவு
நீர்ப்பாச்சற் பகுதி வேளாண்மை நாளேற வருவாய் ஏறிவருவது தெளிவாயிற்று.

• அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்
,, கந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. கந்தையா
,, நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.

ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

ஆரம்ப கருத்தாக்கள்:—
Dr சி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R. R. நல்லையா J. P. யா. க. ச. தலைவர்.
சி. முத்தவேலு J. P. கொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்.
K. தம்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை.
ஆ. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை.
(H 192. 6-11-35 to 5-5-36) (வி)


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 9th January 1936